# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:13 வள்ளுவர் ஆண்டு 2029 சித்திரை 10 (23-04-1998) வியாழக்கிழமை UTHAYAN– A lively National Tamil Daily கதிர்:125

# காணாமற்போனோர் பற்றிய அறிக்கை ஜனாதிபதியிடம்!

## நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டது

கொழும்பு, ஏப்ரல் 23

யாழ். குடாநாட்டில் காணாமற்போனோர் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட பாதுகாப்பு அமைச்சின் விசாரணைக் குழு தனது அறிக்கையை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்துள்ளது.

நேற்று முன்தினம் அலரி மாளிகையில் வைத்து இந்த அறிக்கை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

ஓய்வுபெற்ற நிர்வாக சேவை அதிகாரி பந்துல குலதுங்கவை தலைவராகக் கொண்ட இவ்விசாரணைகுழுவில் வைஸ் அட்மிரல் எச். சி. ஏ. சி. திசோரா, எயர் அட்மிரல் டி. கே. தஸநாயக்க, மேஜர் ஜெனரல் டபிள்யூ. ஏ. டி. சில்வா, எயர் வைஸ் மார்ஷல், கே. டி. ஏ. பீரிஸ், சிரேஷ்ட பிரதிப் பொலீஸ்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கொல்லப்பட்டோர் 16பேர் எனத் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 23

யாழ். குடாநாட்டில் காணாமற்போனோர் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வந்த விசாரணைக்குழு 765 பேர் பற்றிய முறைப்பாடுகளில் 201 பேர் பற்றிய விடயங்களைக் கண்டறிந்துள்ளது என்று நேற்று முன்தினம் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலை பெற்றவர்கள், பிணையில் சென்றவர்கள், விளக்கமறியலில் உள்ளவர்கள், கைதான பின்பு கொலையுண்டவர்கள் ஆகியோர் இந்த 201 பேரில் அடங்குவர்.

கைது செய்யப்பட்டபின் கொலையுண்டவர்கள் 16 பேர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குழுவினரின் விதப்புரையின் பேரில் இனம் காணப்பட்ட சந்தேக நபர்கள் மீது வழக்குத் தொடர என 25 முறைப்பாடுகள் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

சந்தேகநபர்களை இனம் காணவென 134 முறைப்பாடுகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்று குழு தீர்மானித்துள்ளது. (இ-3-ரீ)

## சோதனை நடைபெறாத நகரத்தடைநிலையங்களில் இறங்கத் தேவையில்லை

### நகரத் தளபதி அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 23

512 ஆவது படையணியின் கீழ் வரும் யாழ். நகரப் பகுதியில் (நல்லூர், யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில்) உள்ள சோதனைத் தடைநிலைகளில் படையினர் வெளியே நின்று சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ளாத வேளையில் அத்தடை நிலையங்கள் ஊடாகச் செல்லும் மோட்டார் சைக்கிள் ஓட்டிகளும், சைக்கிள் ஓட்டிகளும் தமது வாகனங்களை விட்டு இறங்கி உருட்டவேண்டிய தேவையில்லை. அத்தகைய வேளைகளில் வேகத்தைக் குறைத்து மோட்டார் சைக்கிள், சைக்கிளை செலுத்தியவாறே சோதனைச் சாவடிகளைத் தாண்டிச்செல்லலாம்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரிப் பகுதியில் பெண் சுட்டுக் கொலை!

யாழ்ப்பாணம், ஏப். 23

சாவகச்சேரி நகரப் பகுதியில் நேற்று மாலை 7.45 மணியளவில் 5 பிள்ளைகளின் தாய் ஒருவர் இனந்தெரியாதவர்களால் சுடப்பட்டார்.

தெய்வேந்திரன் சகுந்தலா (44 வயது) என்ற அந்தப் பெண் பின்னர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் இறந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

கச்சாய் வீதியில் தேநீர் கடை ஒன்றை நடத்தி வரும் இவர் கடையைப் பூட்டிவிட்டு வீட்டுக்குத் திரும்பும் போதே சுடப்பட்டதாகத் தெரியவந்தது.

(10ஆம் பக்கம் பார்க்க)

## 'ராகிங்' தடைச் சட்டமூலம் நேற்று நாடாளுமன்றில் நிறைவேறியது

### குழுமி நின்று மாணவர் எதிர்ப்புக் கோஷம்

கொழும்பு, ஏப். 23

'ராகிங்' எனப்படும் பகிடிவதைத் தடைச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நேற்றுப் பிற்பகல் திருத்தத்துடன் நிறைவேறியது.

இலங்கை முற்போக்கு முன்னணி உறுப்பினர் மாத்திரம் சட்டமூலத்தை எதிர்த்து வாக்களித்தார்.

ஐ.தே.க. சமர்ப்பித்த பல திருத்தங்களை அரசாங்கம் ஏற்றுக்கொண்டது.

அமைச்சர் ஜி.எல். பீரிஸ் சபையில் பேசியபோது, 'பகிடிவதை என்ற பெயரில் சில கல்வி நிலையங்களிலும், பல்கலைக்கழகங்களிலும் இடம்பெற்ற சம்பவங்களைத் தடுப்பதற்கு இந்தச் சட்டம் உதவும்'' என்றார்.

இலங்கை முற்போக்கு முன்னணி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் இலங்கைக்கு இந்தியா உதவாது!

### நாகேந்திரநாத் ஜா தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 23

'விடுதலைப் புலிகளுடன் இலங்கை அரசு ஈடுபட்டிருக்கும் யுத்தத்தில் இலங்கை அரசுக்கு இந்தியா இராணுவ உதவி வழங்கும் சாத்தியம் இல்லை'

இப்படி இந்தியாவின்வெளிநாட்டுக் கொள்கை ஆலோசகர் நாகேந்திர நாத்ஜா கொழும்பில் இந்தியப் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தியாவின் புதிய அரசாங்கம் அதன் அயல் நாடுகளுடன் நடு நிலைமைக் கொள்கையைக் கடைப்பிடிக்கும்.

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்திலும் இந்தியஅரசு நடு நிலைமைக் கொள்கையையே கடைப்பிடிக்கும்.

இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையே சிநேகபூர்வமாக உறவுகள் இருப்பதனால் நாட்டின் இனப் பிரச்சினை குறித்து இந்தியா சிநேகமனப்பான்மையுடன் அக்கறை செலுத்துவதையிட்டு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் அரசுபாரதூரமாக எண்ணமாட்டாது என்று நம்புகின்றேன்.

இலங்கை அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் கீழ் தமிழ் மக்களுக்கு அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டும். எந்தத் தீர்வு ஏற்பட்டாலும் வடக்கு—கிழக்கு இணைப்பு தொடர வேண்டும். இதுவே தமிழ் மக்களின் அடிப்படை அபிலாஷையாகும். தமிழ்மக்களுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்பதை அங்கீகரிக்க வேண்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலைப் பகுதியில் சுற்றிவளைப்பு

மட்டக்களப்பு, ஏப். 23

திருகோணமலை மாவட்டம் றால்குழி, இந்திக்குளம் ஆகிய இடங்களில் நேற்றுப் பாரிய சுற்றிவளைப்பு, தேடுதல்கள் இடம்பெற்றன.

நேற்றுக் காலை முதல் பிற்பகல் வரை இடம்பெற்ற தேடுதலில் வீடுகள் சோதனையிடப்பட்டன.

அதேநேரம் உப்பாறு பிரதேசம் நோக்கி மோட்டார்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## படையினர் சினைப்பர் தாக்குதல்

கொழும்பு, ஏப். 23

ஒலுமடுப்பகுதியில் நேற்று முன்தினம் வெற்றி உறுதிப் படையினர் மேற்கொண்ட சினைப்பர் தாக்குதலில் ஆறு விடுதலைப் புலிகள் உயிரிழந்ததாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேநேரம் குஞ்சுக்குளத்துக்கு வட-மேற்கே இடம்பெற்ற மற்றுமொரு சம்பவத்தில் இன்னொரு புலி உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## பொலீஸ் ஜீப் மீது கல்முனையில் தாக்குதல்

### எழுவர் உயிரிழந்தனர்

வவுனியா, ஏப் 23

அம்பாறையில் காரைதீவில் இருந்து கல்முனை நோக்கிச் சென்று கொண்டிருந்த பொலீஸ் ஜீப் மீது கல்முனை நகரில் வைத்து விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் மேற்கொண்ட தாக்குதலில் 7 பொலீஸார் உயிரிழந்தனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சாய்ந்தமருது வைத்தியசாலையில் சிகிச்சைக்காகப் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவரை அனுமதித்துவிட்டு திரும்பிக்கொண்டிருந்த பொலீஸ் ஜீப் மீதே விடுதலைப் புலிகள் தாக்குதல் மேற்கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

ஜீப் மீது கிரனேட் தாக்குதலை நடத்தி பின்னர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும் —

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு வருவோருக்கு விசேட அடையாள அட்டை

### அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 23

வடக்கு - கிழக்கில் இருந்து கொழும்பு வந்து தற்காலிகமாக தங்கியிருப்பவர்களுக்கு கணனி மயப்படுத்தப்பட்ட விசேட அடையாள அட்டை வழங்கும் மையம் ஒன்று கொழும்பில் செயற்படும்.

நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் இதனைத் தெரிவித்தார்.

கொழும்பிலும் புறநகர்ப் பகுதியிலும் தமிழர்கள் வகைதொகையின்றிக் கைதாகும் நடவடிக்கையை நிறுத்தக் கோரும் பிரேரணை ஒன்று தொடர்பாக நேற்று நாடாளுமன்றத்தில் ஒத்திவைப்பு நேரத்தில் விவாதம் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தினால் கொண்டு வரப்பட்ட இந்த பிரேரணை விவாதத்தில் பேசுகையிலேயே அமைச்சர் பீரிஸ் மேற்கண்ட

(10 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## சின்னையா கந்தப்பு

(இளைப்பாறிய ஓவசியர்)

கரவெட்டி மத்தி தச்சன்தோப்புப் பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த சின்னையா கந்தப்பு (இளைப்பாறிய ஓவசியர்) 21-04-98 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சிவகாமியின் அன்புக் கணவரும், விமலராசா, ஜெயராசா, தவராசா (பவா), சிவராசா (அப்பன்), சுந்தரராசா (சுந்தர்), வில்வராசா (மாணி), நளாயினி ஆகியோரின் அன்புத் தந்தையும், இலட்சுமியின் அன்புச் சகோதரரும், AJ SJ கந்தசாமியின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23-04-98) வியாழக்கிழமை காலை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சோனப்பு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. தவராசா (பவா)
(மகன்)

கரவெட்டி மத்தி,
கரவெட்டி.

(55125)

---

## சிவஸ்ரீ பாலசுந்தரக் குருக்கள் வைத்தியநாத சிவாச்சாரியார்

ஊரெழுமேற்கு, சுன்னாகத்தைப்பிறப்பிடமாகக் கொண்டவரும், ஊரெழு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய பிரதமகுருவுமான சிவஸ்ரீ பாலசுந்தரக்குருக்கள் வைத்தியநாதச்சிவாச்சாரியார் 22-4-98 ஆம் திகதி அதிகாலை 5 மணியளவில் சிவனடிசேர்ந்தார்.

இவர் காலஞ்சென்ற பாலசுந்தரக் குருக்கள் - மீனாம்பிகைஅம்மா தம்பதிகளின் புதல்வரும், இராஜேஸ்வரிஅம்மா, பஞ்சாட்சரக்குருக்கள் ஆகியோரின் அன்புச் சகோதரரும், பவானிஅம்மாவின் அன்புக்கணவரும், வாகீஸ்வரி, தியாகராஜக்குருக்கள், சுந்தரேஸ்வரி, ஸ்ரீமசுந்தரக்குருக்கள் (லண்டன், முருகன் கோயில்), பாலசுந்தரக்குருக்கள் (கொழும்பு ஸ்ரீ பொன்னம்பலவாணேசர் கோயில்), சபேஸ்வரசர்மா ஆகியோரின் அன்புத் தந்தையும், நித்தியானந்தசர்மா (கதாப்பிரசங்க வித்துவான்), வைத்தீஸ்வரசர்மா (அளவெட்டி பெருமாள் கடவை), சசிலாதேவி, சிவலோஜினி, சுகிர்தாம்பிகை ஆகியோரின் மாமனாரும், பிரதாஜினி, (ஆசிரியை, திருநெல்வேலி இ. த. க. பாடசாலை), நித்தியாஜினி, பாரத்வாஜன், ஸ்ரீ வத்ஷன், சுபாசினி, சண்முகப்பிரியா, மதுராமன், சிந்துஜன், நிவேதனன் ஆகியோரின் பேரனும், சோமசுந்தரசர்மா, மீனாம்பிகை, சோமகலாதரசர்மா, ரஜனி ஆகியோரின் பெரியப்பாவும், கோப்பாய் பரமசாமிக்குருக்கள் அவர்களின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23-4-98) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பெ'க்கணை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி ப. வைத்தியநாதக்குருக்கள்
குடும்பத்தினர்

ஊரெழு மேற்கு,
அம்மன் கோயிலடி,
சுன்னாகம்.

(55144)

---

## திருமதி மனோன்மணி வேலாயுதபிள்ளை

ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி வேலாயுதபிள்ளை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதபிள்ளையின் (சிறாப்பர் காகில்ஸ் லிமிட்டற்) அன்பு மனைவியும், மகாதேவி (முன்னாள் ஆசிரியை யாழ் / இந்து மகளிர் கல்லூரி), மகாராணி (கனடா) ஆகியோரின் தாயாரும், சண்முகலிங்கம், தில்லைநாதன் (கனடா) ஆகியோரின் மாமியாரும், யோகமணி, சரஸ்வதி, வடிவாம்பிகை ஆகியோரின் சகோதரியும், சபீஸ், தினேஷ், லதிஷ் (கனடா), ஷைலா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23-4-98) காலை 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

தகவல்:
S. சண்முகலிங்கம்
(மருமகன்)

மிசன் பாடசாலை ஒழுங்கை,
கோண்டாவில் கிழக்கு.

(55381)

---

## திருமதி பார்வதிஅம்மா கந்தையா

''வேல் இன்'', அளவெட்டி தெற்கில் வசித்தவரும், அளவெட்டி அருணோதயக் கல்லூரி இளைப்பாறிய ஆசிரியை செல்வி சீதாதேவி கந்தையாவின் தாயாருமாகிய திருமதி பார்வதிஅம்மா கந்தையா இம்மாதம் 17 ஆம் திகதி கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18 ஆம் திகதியன்று கொழும்பில் நடைபெற்றன.

இத்தகவலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி இராசேந்திரம்

52, மருதடி வீதி,
யாழ்ப்பாணம்.

(55123)

---


## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி.

அருண்குமார், குஷ்பு
நடித்த
துள்ளித்திரிந்த காலம்
(புதிய வெளியீடு)
நேரம்:- 10-30, 2-30
தொலைபேசி இல.
070 - 212223

(55008)

---

சுன்னாகம்

## நாகம்ஸ் சினிமா

அகல வெண்திரையில்
23-04-98 வியாழன்
விஜயகாந் - மீனா
நடித்த
உளவுத்துறை (CD)
10-30 — 2-30
(பழைய நேரம்)

(55131)

---

நெல்லியடி

## மகாத்மா

வெண்திரையில்
22-04-98 முதல்
அஜித், சுபலட்சுமி
பிரகாஷ்ராஜ்
நடித்த
ஆசை
காட்சிகள்: 10-30—2-30
(பழையநேரப்படி)

(சி/3406)

---

## தேவை

பெண்கள், குழந்தைகள் ஆடைகள் வெட்டித் தைப்பதில் ஆர்வமும், தேர்ச்சியுமுள்ள பெண்கள் தேவை. நேரில் வரவும்.

ராஜா ஸ்ரோர்ஸ்
153, நவீனசந்தை,
யாழ்ப்பாணம்.

(55147)

---

யாழ்.

## ரீகல்

வெண் திரையில்
இன்று முதல்
பிரபுதேவா, நக்மா
வடிவேல்
காதலன்
(CD வெளியீடு)
அடுத்த வெளியீடு
காதலி
(CD வெளியீடு)
10.30 - 2.30

(55142)


---

## NOTICE

UNIVERSITY OF JAFFNA, SRILANKA.

Faculty of Medicine

Commencement of Para-Clinical Lectures for the 17 th Batch

The Para-Clinical Lectures for the 1994 batch (17 th) will commence on 20 th April 1998.

Registrar
1998-04-17

(C/3526)

---

## கும்பாபிஷேகம்

யாழ். இந்துமகளிர் கல்லூரி நடுத்தோட்ட இராஜவரோதயப் பிள்ளையார் ஆலய புனருத்தாரண மஹா கும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை 7.20 மணிமுதல் 9.11 மணிவரை நடைபெறவுள்ளது. இதனை ஒட்டி இன்று காலை 8 மணி முதல் எண்ணெய்க் காப்பு சாத்துதல் இடம் பெறும்.

---

# மரண அறிவித்தல்கள்

## அந்தோனி சொலமன்

(இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர்)

நாவாந்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தர் அந்தோனி சொலமன் 22-4-98 இல் தனது இல்லத்தில் இறைபதமடைந்தார்.

இவர் இராசமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கீதப்பொன்கலன், டெய்சி, அரசரட்ணம், லலிதா, டென்சிங் மரியதாஸ் (சுவிஸ்), ஜெயக்கொடி (பெல்ஜியம்), ஜீவா (சுவிஸ்), அல்வினா, அமலதாஸ் (சுவிஸ்), ரஞ்சினி, சகாயன் ஆகியோரின் அன்புத் தந்தையும், றோஸ்மேரி, அல்போன்ஸ், யேசுதாசன் (தாயிர்), டொறிஸ், தவமணி, வெனிற்றா, லோறன்ஸ், அசிந்தா, கேமலதா ஆகியோரின் அன்பு மாமனாரும், சவரிமுத்து, புனிதசீலி ஆகியோரின் மைத்துனரும், சுவானி அந்தோனிப்பிள்ளையின் சகோதரனும், புஸ்பா, புஸ்பராஸ், சீலன், நந்தன், நந்தினி, யோண்சன், அருள்ராசா, ஆனந்தம் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை (23-4-1998) இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் நாவாந்துறை புனித நீக்கிலார் ஆலயத்தில் திருப்பலியுடன் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

29, கோயில் ஒழுங்கை,
நாவாந்துறை,
யாழ்ப்பாணம்.

(55130)

---

## ஏகாம்பரநாதர் சுயம்சோதி

மீசாலையைத் தமது பிறப்பிடமாகக் கொண்ட ஏகாம்பரநாதர் சுயம்சோதி (Msc, FRIC – முன்னாள் இரசாயனப் பகுப்பாய்வாளர்) கனடாவில் காலமானார்.

அன்னார் ஆங்கில ஆசிரியை அபிராமி அவர்களின் அன்புக் கணவரும், சாந்தி (B sc), பவானி (பொறியியலாளர்), காந்தன் (பொறியியலாளர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், உமையம்மை, பராசக்தி, பரம்சோதி, சாம்பசிவமூர்த்தி, காலஞ்சென்றவர்களான கமலாம்பிகை, ஞானாம்பிகை, இரத்தினசபாபதி ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை (23 — 04 — 1998 இல்) கனடாவில் நடைபெறும்.

அவரின் ஆத்ம சாந்திக்கான ஒரு பிரார்த்தனை நிகழ்வு ''ஏகாம்பர வாசா'' இல்லத்தில் இன்று மாலை 3.00 மணிக்கு நடைபெறும்.

தகவல்:
திருமதி பராசக்தி கந்தையா
(சகோதரி)

'' ஏகாம்பர வாசா''.
மீசாலை கிழக்கு,
மீசாலை.

(சி/3522)

---

## திருமதி இரத்தினநாயகி சிவபாதசுந்தரம்

பருத்தித்துறை வியாபாரி மூலையைச் சேர்ந்த திருமதி இரத்தினநாயகி சிவபாதசுந்தரம் அவர்கள் 22 — 04 — 1998 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நமசிவாயம்பிள்ளை சிவபாதசுந்தரம் (ஓய்வு பெற்ற காரியதரிசி, மலேரியாத் தடுப்பு இயக்கம்) அவர்களின் அன்பு மனைவியும், சோமபாலன் (படப்பிடிப்பாளர்), காலஞ்சென்ற டாக்டர் வசந்தநாதன் (பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர், வவுனியா), சுந்தரேசன் (விரிவுரையாளர், ஆசிரியர் கலாசாலை, பலாலி), திருமதி பத்மதேவி —சிவானந்தசோதி (ஓய்வு பெற்ற ஆசிரியை), அருட்பதி (ஆசிரியர், தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்), செல்வி உமாதேவி — சிவபாதசுந்தரம் (பிராந்திய பல் வைத்தியர், சுகாதார திணைக்களம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி புவனேஸ்வரி, திருமதி மனோன்மணி (ஓய்வு பெற்ற ஆசிரியர்), திருமதி பத்மசோதி (இலங்கை வங்கி, கொழும்பு), வெ. சிவானந்தசோதி (Accounts Executive), (மகாராஜா நிறுவனம், கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவகிருபா, தவநாதன், யோகநாதன் அருணபிரபு, சீரோன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை (23 — 04 — 1998) பிற்பகல் 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பருத்தித்துறை இந்து மயானத்திற்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
டாக்டர் (செல்வி)
உமா சிவபாதசுந்தரம்
(மகள்)

வியாபாரி மூலை,
பருத்தித்துறை.

(55146)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருவருடத்துக்கு மேற்பட்ட பிறப்புப்பதிவை
# பதிவாளர் நாயகமே பதிவு செய்யமுடியும்

## மாவட்டப் பதிவாளர் விளக்கம்

யாழ்ப்பாணம், ஏப். 23

ஒரு வருடத்துக்கு மேற்பட்ட பிறப்பு, இறப்புகளைப் பதிவு செய்யும் அதிகாரம் பதிவாளர் நாயகத்துக்கு மட்டுமே உண்டு.

இவ்வாறு யாழ். செயலக மேலதிக மாவட்டப் பதிவாளர் என். சதாசிவஐயர் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் 500-க்கு மேற்பட்ட சிறுவர்களுக்கு பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் பதியப்படவில்லை என்ற ஆய்வுத் தகவல் குறித்து கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஒரு வருடத்துக்கு உட்பட்ட பிறப்பு, இறப்புப் பதிவுகளைப் பதிவதற்கு கட்டளையிடும் அதிகாரம் மட்டுமே மேலதிக மாவட்ட பதிவாளருக்கு இருக்கிறது. ஏனைய நாடாளுமன்றச் சட்டப்படி பதிவாளர் நாயகத்தினாலே பதியப்பட வேண்டும்.

ஒரு வருடத்துக்கு மேற்பட்ட பிறப்புப் பதிவுகளை மேற்கொள்வதற்கு பெற்றோரின் விவாகச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

அப்பெற்றோருக்கு பிறந்த பிள்ளைகளின் பட்டியல், நேர்மூத்த, நேர் இளைய பிள்ளைகளின் புறப்புச் சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

வைத்தியசாலையில் குழந்தை பிறந்திருந்தால் வைத்தியரின் கடிதம் — வீட்டில் குழந்தை பிறந்திருந்தால் தடுப்பூசி அட்டை, மருத்துவ மாதுவின் குறிப்பு, குழந்தையின் சாதகம், கிறிஸ்தவரானால் ஞானஸ்தானச் சான்றிதழ், பாடசாலை செல்லும் பிள்ளையானால் அதிபரின் கடிதம், கிராம சேவையாளரின் அறிக்கை பிரதேச செயலரின் மேலொப்பம் என்பன வேண்டும்.

பெற்றோரின் பிறப்புச் சான்றிதழ் (இருப்பின்) நாற்பது ரூபா பெறுமதியான முத்திரையும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட ஆவணங்கள் அனைத்தும் சமர்ப்பிக்கப்பட்டபின் 24 ஆம் பிரிவின் கீழான பிரதிக்கிளை படிவம் நிரப்பப்பட்டு மாவட்டப் பதிவாளரின் விசாரணைக்கு பிள்ளை வைத்திய சாலையில் பிறந்திருந்தால் வைத்தியப் பதிவேட்டுடன் வைத்தியர் அல்லது அவரின் பிரதிநிதி, பிள்ளையுடன் பெற்றோர் கிராம சேவையாளர் ஆகியோர் சமுகமளிக்க வேண்டும்.

பிள்ளை வீட்டில் பிறந்திருந்தால் பெற்றோர்பிள்ளையுடன் கிராம சேவையாளர் பாடசாலை செல்லும் பிள்ளையானால் பாடசாலை அனுமதி ஏட்டுடன் அதிபர் அல்லது பிரதிநிதி, பிரசவம் பார்த்த மருத்துவ மாது, அல்லது பிரசவம் பார்த்த பெண், பிரசவம் நிகழ்ந்த போது வீட்டிலிருந்த இருவர் (இவர்களில் ஒருவர் பெண்ணாயிருத்தல் வேண்டும்) ஆகியோர் விசாரணைக்கு சமுகமளிக்க வேண்டும்.

படிவம் பூர்த்தியாக்கப்பட்டு விசாரணைகள் திருப்திகரமாக நடைபெற்ற பின் பதிவாளர் நாயகத்திற்கு பிறப்பு விண்ணப்பப் படிவம் அனுப்பப்பட்டு பதிவு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் பதியப்பட வேண்டும் என்று பல பொது அமைப்புகள் என்னிடம் வந்து முறையிட்டார்கள். மேற்குறித்த நடவடிக்கை பற்றி கூறியதுடன் அதனைக் கேட்டுக் கொண்டுபோய்விடுவார்கள்; எவரும் இது வரையும் இவ்வாறான பதிவுகளை மேற்கொள்ள முன்வரவில்லை. என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ-5)

# 9 தபாற் பொதிகளே நேற்று யாழ். வந்தன

யாழ்ப்பாணம், ஏப். 23

யாழ். மாவட்டத்துக்குரிய வெளியூர்த் தபால்கள் அடங்கிய 9 பொதிகள் நேற்று புதன்கிழமை செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டன.

இதேவேளை யாழ்.மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து சேகரிக்கப்பட்ட தபால்கள் அடங்கிய 14 தபாற்பொதிகள் செஞ்சிலுவைச்சர்வதேசக் குழுவின் கப்பல் மூலம் நேற்று திருமலைக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

கொழும்பு மத்திய தபால் நிலையத்தில் தபால்களைத் தரம் பிரிப்பதில் காட்டப்படும் தாமதமே குறைவான தபாற் பொதிகள் எடுத்து வரப்படக் காரணமாகும்.

கடந்த ஒருமாத காலமாக குடாநாட்டிற்குகப்பல் மூலம் எடுத்து வரப்படும் தபாற் பொதிகளின் எண்ணிக்கை குறைவடைந்து வந்துள்ளமை தெரிந்ததே.

நேற்று யாழ். எடுத்துவரப்பட்ட தபாற்பொதிகள் உள்நாட்டுத் தபால்களேஅடங்குகின்றன. அவற்றைத் தரம் பிரித்து விநியோகிக்கும்பணி இன்று ஆரம்பமாகும் என பிரதம தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-7)

### நெடுந்தீவுப் பாடசாலைகளில்

# ஆண்டு6 மதிப்பீட்டுதிட்டம் அமுலாக்கப்படவில்லை

யாழ்ப்பாணம், ஏப். 23

யாழ். மாவட்டப்பாசாலைகளில் இந்த ஆண்டு முதல் ஆறாம் ஆண்டில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு புதிய மதிப்பீட்டுத் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தப் புதிய மதிப்பீட்டுத் திட்டத்தின் படி மாணவர்களின் கல்வி வளர்ச்சியுடன் அவர்களின் செயற்றிறன் மற்றும் உளவளர்ச்சி என்பனவும் மதிப்பிடப்படும்.

இந்த மதிப்பீட்டுத் திட்டம் யாழ். மாவட்டத்தில் பல பாடசாலைகளில் அமுல் படுத்தப்பட்டுள்ள போதிலும் நெடுந்தீவுப் பகுதி பாடசாலைகளில் இத்திட்டம் இது வரை நடைமுறைப் படுத்தப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-103-9)


தரமான புளொக் தயாரிப்பதற்கு நாடவேண்டிய இடம்



அருண்
புளொக் தயாரிப்பாளர்
அத்துடன்
குறைந்த கட்டணத்தில்
தரமான முறையில்
போட்டோ பிரதிகள்
அடையாள அட்டை
கவரிடுதல் (LAMINATION)
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


## ச.ச. நிலைய ஆண்டுவிழா

தொண்டமானாறு கெருடாவில் சனசமூக நிலையத்தின் ஆண்டு விழாவும் மலர் வெளியீடும் எதிர்வரும் சனிக்கிழமை நிலையமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவில் முதன்மை விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் கோபாலகிருஷ்ண ஐயர், யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி. வி. கிருஷ்ணசாமி ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை பிரதேச செயலக சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி பரமேஸ்வரி பொன்னையா, பருத்தித்துறை பிரதேச சபைச் செயலாளர் திரு. ச. செவ்வந்திநாதன், யாழ்,மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாசத் தலைவர் என். போஜன் ஆகியோரும் கலந்து கொள்வார்கள். (ஐ-173)

## புறநிலைப் படிப்பின் பிரிவின் திறப்புவிழா

யாழ்ப்பாணம், ஏப் 23

யாழ். பல்கலைக்கழகத்தின் புற நிலைப் படிப்புகள் அலகின் பிரிவு ஒன்று எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட உள்ளது.

சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர் க. சந்திரசேகரா தலைமையில் கல்லூரி அருணாசல மண்டபத்தில் நடைபெற உள்ள இந்த ஆரம்ப வைபவத்தில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ பாலசுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ள உள்ளார்.

எதிர்வரும் மே மாதம் நான்காம் திகதி முதல் வடமராட்சிப் பகுதியிலும் இது போன்ற ஒரு புறநிலைப் படிப்புகள் அலகை ஆரம்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. (ஐ-9)

## ஆண்டு விழா

திருநெல்வேலி, ஏப். 23

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணகிராம அபிவிருத்தி சங்கத்தினதும், சனசமூக நிலையத்தினதும் 46 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், விளையாட்டுபோட்டி பரிசளிப்பு விழாவும் கடந்த சனிக்கிழமை நடைபெற்றன. (ஐ-135)

### தபால் ஊழியர் போராட்டம்:

# காசோலைகள் வராது ஓய்வூதியர் பாதிப்பு

தென்மராட்சி, ஏப். 23

தபால் திணைக்கள ஊழியர்களின் மேற்கொண்டுள்ள வேலை நிறுத்தப் போராட்டத்தினால் கொழும்பிலிருந்து சம்பளம் பெறும் அரச ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியர்கள் ஆகியோருக்கு ஏப்ரல் மாதம் கிடைக்க வேண்டிய சம்பளங்கள் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் இன்னமும் கிடைக்கவில்லை.

கொழும்பில் உள்ள ஓய்வூதியப் பிரிவுகளில் இருந்து அனுப்பப்பட்ட வவுச்சர்கள் வந்து சேர்ந்துள்ள போதிலும் இதுவரை அதற்குரிய காசோலைகள் வராததால் ஓய்வூதியத்தினைப் பெற்றுக் கொள்ள முடியவில்லையெனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

## உயர்தர மாணவருக்கான விரிவுரை

யாழ்ப்பாணம், ஏப். 23

ஜி. சீ. ஈ உயர்தர வகுப்பு வர்த்தக மாணவர்களுக்காக யாழ். மத்திய கல்லூரி வர்த்தக மாணவர் மன்றம் ஏற்பாடு செய்துள்ள இலவச விரிவுரைத் தொடரில் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும். 2 ஆவது விரிவுரையில் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி கலைவாணி இராமநாதன் ''சைவசித்தாந்த அடிப்படைகள்'' என்ற தலைப்பில் விரிவுரை நிகழ்த்துவார். (ஐ-4)

## நோயாளருக்கான ஜெபம்

சுண்டுக்குளி கண்டி வீதியிலுள்ள இலங்கை பெந்தபோஸ்தே சபையில் இன்று வியாழன் முதல் எதிர்வரும் ஞாயிறு வரை பி. ப. 5.00 மணிக்கு வியாதிஸ்தர்களுக்கான ஜெபங்கள் இலவசமாக அளிக்கப்படவுள்ளன.

சகல நோயாளர்களும் இதில் கலந்து சுகம் பெறலாமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-90)

### யாழ். மீன்பிடித் தொழிலுக்கு

# கண்ணாடி இழையிலான கட்டுமரங்கள் வரும்

யாழ்ப்பாணம், ஏப். 23

யாழ். குடாநாட்டில் கடற்றொழில் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதற்காக தும்புக்கண்ணாடி இழையிலான கட்டு மரங்கள் எடுத்து வரப்படவுள்ளன.

கடந்த 3 ஆம் திகதி கொழும்பில் பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற வடபகுதி மீன்பிடி தொடர்பான கலந்துரையாடலில் கட்டு மரங்கள் எடுத்து வருவதற்கான அனுமதி வழங்கப்பட்டதாக யாழ். மாவட்டகடற்றொழில் விரிவாக்க அலுவலர் எஸ். ஜோசப் தெரிவித்தார். (ஐ-7)

## தலைமைத்துவப் பயிற்சி

கொழும்புத்துறை, ஏப்.23

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின்சம்மேளனம், பிரதேச செயலாளர் பிரிவு சமாசம் மற்றும் ஏனைய சனசமூக நிலையங்களின் பிரிவு நிதிகளுக்கான தலைமைத்துவப் பயிற்சி வகுப்பு எதிர்வரும் சனிக்கிமை முற்பகல் 10.00 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி மண்டபத்தில் யாழ். பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி தலைமையில் நடைபெறும்.

அன்றைய தினம் யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனத்தின் ஆட்சிக்குழுக்கூட்டமும் சம்மேளனத்தின் தலைவர் ந. போஷன் தலைமையில் அங்கு இடம்பெறும். (ஐ-30)

## ஆலயம் புனரமைப்பு

மானிப்பாய், ஏப். 23

அராலி வண்ணப்புரம் ஸ்ரீவிசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாதேஸ்வரர் தேவஸ்தான பரிபாலனசபையால் இவ்வாலயம் கடந்த 3 ஆம் திகதி முதல்புனரமைக்கப்பட்டு வருகிறது.

போர்க்காலச்சூழ்நிலையில் இவ்வாலயம் சேதங்களுக்குள்ளாகியது. (ஐ-90)

## கண்ணீர் அஞ்சலி

காரைநகர் பெற்றெடுத்த இசைச்செல்வம்
சங்கீத பூசணமும்
ஓய்வு பெற்ற கொழும்புத்துறை ஆசிரியரும்
பயிற்சிக் கல்லூரி இசைவிரிவுரையளாருமான

**சுப்பிரமணியம் நடராசா**

அவர்களின் திடீர் மறைவைக் கேட்டு அதிர்ச்சியுற்று
ஆழ்ந்த கவலையுடன் நிற்கும்:

இசைப்பிரியர்களும், நண்பர்களும்
நீலிப்பந்தனை,
காரைநகர்.

(55129)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் முன்பள்ளி பாலர் பாடசாலை

கட்டட நிதிக்கான
அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு

மேற்படி அதிர்ஷ்டலாபச் சீட்டு 14 - 04 - 98 ஆம் திகதியன்று அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு பின்வரும் இலக்கங்கள் அதிர்ஷ்டசாலிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

1 ஆம் பரிசு இல. 014 (சிவப்பு நிறம்)
2 ஆம் பரிசு இல. 232 (பச்சை நிறம்)
3 ஆம் பரிசு இல. 094 (பச்சை நிறம்)

ஆறுதல் பரிசுகள் (வெள்ளை நிற சீட்டுகள்,
இல. 3299 இல. 1487 இல. 3741
இல. 2595 இல. 618

மேற்படி பரிசுக் குரியவர்கள் 02 - 05 - 98 ஆம் திகதி அத்தாய் பாலர் பாடசாலையில் வந்து பரிசைப் பெற்றுக் கொள்ளலாம்.

செயலாளர்,
இளைஞர் சேவைக்கழகம்,
அத்தாய்.

(சி/3518)

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர்
செல்வி சத்தியேஸ்வரியின்
அன்புத் தந்தையார்
**வைத்திலிங்கம் சுப்பிரமணியம்**
அவர்கள் இறைவனடி சேர்ந்ததையிட்டு எமது ஆழ்ந்த துயரத்தையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

யா/காங்கேசன்துறை மகா வித்தியாலயம்,
யா/வீமன்காமம் மகா வித்தியாலயம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

காங்கேசன்துறை. (55119)

# வாழ்த்துகின்றோம்

19 - 03 - 1998 அன்று சமாதான நீதிவானாகவும் உத்தியோகப் பற்றற்ற நீதிவானாகவும் சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட சட்டத்தரணி
திரு. ஆ. க. நடராசா அவர்களையும்
திரு. மு. சுந்தரலிங்கம் அவர்களையும்
திரு. மா. தர்மலிங்கம் அவர்களையும்
வாழ்த்துகின்றோம்,

கிருஷ்ணபிள்ளை பரமதாஸ்

மாலுசந்தி,
அல்வாய். (சி - 3520)

## நூல் வெளியீடு

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் தொண்டைமானாறு அருள்மிகு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலய சுற்றாடலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் வாராந்த நிகழ்வில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணிக்கு ''ஞானச் சுடர்'' மாதநூல் வெளியீடு பேரவையின் தலைவர் சு. திருப்பரங்கிரிநாதன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்விற்கான வெளியீட்டுரையை வல்லை வைத்தீஸ்வரர் தேவஸ்தானத்தின் பிரதமகுரு பிரம்மஸ்ரீ ப. மனோகராக் குருக்கள் நிகழ்த்துவார்.

இந் நூல் ஆய்வுரையை யாழ். சக்கோட்டை றோமன் கத்தோலிக்கத் தமிழ்க்கலவன் பாடசாலை அதிபர் ஆ. வடிவேலு வழங்குவார். (ஐ-30-173)

## பருத்தித்துறை நகரசபை அலுவலகம்

வடமராட்சி, ஏப். 23
பருத்தித்துறை நகரசபை அலுவலகம் பருத்தித்துறை நகரின் மையப்பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இது வரை காலமும் அலுவலகம் நகரமையப் பகுதிக்கு அப்பால் இருந்தமையால் மக்கள் தமது கடமைகளை நிறைவேற்ற அங்கு செல்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியிருந்தனர்.

அண்மையில் பதவி ஏற்ற பருத்தித்துறை நகர சபைத் தலைவர் திரு. வி. விஜயரத்தினம் உடனடியாக எடுத்த நடவடிக்கையைத் தொடர்ந்து நகரசபை அலுவலகம் பருத்தித்துறை நகரில் தும்பளை வீதி இரண்டாம் குறுக்குத்தெருச்சந்தியிலுள்ள மாடிக் கட்டடத்துக்கு இடமாற்றப்பட்டுள்ளது. (ஐ-173)

# தேவை

நன்கு அனுபவம் உள்ள பெண்களுக்குரிய ஆடைகள் தைக்கும் பெண்கள் தேவை.

தொடர்பு:
**வரதமகள்**
No. 60, நவீனசந்தை,
யாழ்ப்பாணம்.
(55094)

# முதலாவது பிறந்த தினம்

இன்று (23 - 04 . 1998) தனது முதலாவது பிறந்த தினத்தைக் கொண்டாடும்
செல்வன்
**சிவானந்தா சித்தரஞ்சனை**

அம்மப்பா, அம்மம்மா, அப்பப்பா, அப்பாச்சி, அத்தை, சித்தப்பாமார் (லண்டன்), சித்திமார் எல்லோரும் வாழ்த்துவதோடு நயினை நாகபூஷணி அம்பாளும், காரைநகர் மணற்காட்டு முத்துமாரி அம்பாளும் எல்லா நலன்களையும் செல்வனுக்கு அருளப் பிரார்த்திக்கின்றோம்.

சகுந்தலாதேவி ஏகநாதன்.
[அப்பாச்சி]

30/11, அத்தியடி,
பிள்ளையார் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம். (சி. 3524)

# மாபெரும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி

ஆவரங்கால், மத்திய விளையாட்டுக் கழகத்தின் நிதி வளர்ச்சிக்காக நடத்தப்படும் சவாரிப் போட்டி

இடம்:- ஆவரங்கால் சவாரித்திடல்
நாள்:- 10 - 05 - 98 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம்:- பி. ப. 1. 00 மணி (புதிய நேரம்)
அன்பளிப்பு ரூபா 10.

ம. வி. கழகம்
ஆவரங்கால்

(55126)

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை
திருமதி சு. திருச்செல்வம்
அவர்களின் அருமை மாமியார்
**திருமதிஐஸ்வரியம் நவமணி**
அவர்கள்
22-04-1998 அன்று இறைபதமெய்தியதையிட்டுத் துயருறும் அன்னாரது குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மாசாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
கொக்குவில் இந்துக்கல்லூரி,
கொக்குவில்.

(50042)

# கண்ணீர் அஞ்சலி

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் குடும்பநல உத்தியோகத்தராகக் கடமையாற்றும்
திருமதி கௌரி அன்றூ இராசசூரியர்
அவர்களின் புதல்வி
**செல்வி பெர்சியா அன்றூ இராசசூரியர்**
கடந்த 30 - 03 - 98 அன்று காலமானதையிட்டு எமது அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

உத்தியோகத்தர்கள்
சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை,
பருத்தித்துறை.

(சி - 3517)

# கண்ணீர் அஞ்சலி

செல்வன்
**பசுபதி சிவவாசன்**
(பேராதனை பல்கலைக்கழக பொறியியல்பீட மாணவன்)

எமது பிரதேசமான வடமராட்சி கிழக்கின் உதவி அரசாங்கஅதிபர் திரு. பி. பசுபதி அவர்களின் கனிஷ்ட புத்திரன் சிவவாசனின் அகால மரணச்செய்தி கேட்டு ஆறாத்துயர் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்திற்கு எமது கண்ணீர்த்துளிகளால் காணிக்கை செலுத்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/உடுத்துறை மகாவித்தியாலயம்.
தாளையடி.

(சி/3519)

# நகரசபை, சாவகச்சேரி
# 1998 ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

01 - 05 - 98 தொடக்கம் 31 , 12 - 98 வரையிலான காலப் பகுதிக்கு கீழ்க் குறிப்பிடப்படும் சேவைகளுக்கான கேள்விகள் இரு பிரதிகளில் 29 - 04 - 98 ஆம் திகதி முற்பகல் 10-00 மணிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

| விவரம் | கடை இல. | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | கேள்வி வைப்பு | படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 1. ஆட்டிறைச்சிக் கடை | என்எம் எஸ் 1 | 58,400-00 | 1,000/- | 500/- |
| 2. மாட்டிறைச்சிக் கடை | என்எம்எஸ் 111 | 85,000-00 | 1,000/- | 500/- |

மேற்படி வைப்புப்பணம் கேள்விப் படிவக் கட்டணங்களும் செலுத்தப்படுவதன் பேரில் 28 - 04 - 98 ஆம் திகதி 12-30 மணிவரை வழங்கப்படும் படிவங்களில் மட்டும் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப் படிவக் கட்டணங்கள் மீளளிக்கப்பட மாட்டா. சித்திகரமான கேள்விக் காரர்கள் உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டதும் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படும்.

மேற்படி கட்டணங்கள் இவ்வலுவலகத்தில் பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

இது சம்பந்தமான ஏனைய விவரங்கள் இவ்வலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மு.செ. சரவணபவ,
செயலாளர்,
நகரசபை சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி.
17 - 04 - 98 (சி-3515)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களப் பேரினவாதம் மீது அழுத்தம் கொடுக்க முன்வர வேண்டும்

## தெற்குத் தலைவர்களுக்கு அழைப்பு

இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படாததற்குக் காரணம் சிங்களப் பேரினவாதமே. இந்த நிலையை நீக்கி தமிழ் மக்களின் உரிமைகளை வழங்கக்கூடிய தீர்வைக் காண தெற்கில் உள்ள சமாதானத்தில் விருப்பம் கொண்ட தலைவர்கள் சிங்களப் பேரினாவாதம் மீது அழுத்தம் கொடுக்க வேண்டும்.

''புளொட்'' அமைப்பின் யாழ். மாவட்ட அமைப்பாளர் எஸ். கிருபைராஜா மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

யாழ்ப்பாணம் வந்துள்ள சர்வோதய அமைப்பின் தலைவர் ஏ. ரி. ஆரியரத்தினா யாழ். மாநகர சபைக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்து அங்கு இடம்பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டார்.

அக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே கிருபைராஜா மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

70 ஆம் ஆண்டில் சிங்கள இளைஞர்களும், 80 ஆம் ஆண்டில் தமிழ் இளைஞர்களும் ஆயுதம் ஏந்தியதற்கு பேரினவாதமும், தவறான தலைமைத்துவங்களுமே காரணமாகும்.

தெற்கில் இரத்தக்களரி ஏற்பட்டு ஏராளமானவர்கள் உயிரிழந்தனர். தற்சமயம் வடக்கிலும், கிழக்கிலும் இரத்தக்களரி தொடர்கிறது. இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

தெற்கில் வளரும் பேரினவாதத்தை ஒழிக்க சிங்களத் தலைவர்கள் முன்வரவேண்டும்.

விஜயகுமாரதுங்க, சரத் முதட்டுகம போன்ற தெற்குத் தலைவர்கள் வடக்கே வந்து தமிழர்களுடன் உறவாடி சிங்கள மக்கள் மத்தியில் தமிழர்கள் பற்றி எடுத்துக் கூறினர். அதே போன்ற நிலையை இன்றைய தலைவர்களும் உருவாக்க வேண்டும்.

இன்று இரு பெரும் பணிகளுக்காக மாநகர சபையின் நிர்வாகத்தில் நாம் பங்கேற்கிறோம்.

யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட யாழ். நகரை மீளக் கட்டி எழுப்புதல் — தமிழர் உரிமைக் கோரிக்கையை வலியுறுத்துதல் ஆகிய பணிகளை நாம் மேற்கொள்ளவிருக்கின்றோம்.

பதில்கூற முடியாத மனித உரிமைகள் அமைப்பின் பிரதிநிதியாக வந்துள்ள ஆரியரத்தின இங்கு காணாமற்போன 600 பேர் பற்றிய தகவலைப் பெற்றுத்தர வேண்டும் என்றார்.

மாநகரசபை உப -மேயர் திருநாவுக்கரசு, ஈ. பி. ஆர். எல். எவ். பிரதிநிதி றொபேட் ஆகியோரும் உரையாற்றினர். (ஐ – 3)

# பிரிந்து வசித்த மனைவியை போத்தலால் குத்திய கணவன்

நெல்லியடி, ஏப். 23

பிரிந்திருந்த மனைவியை சேர்ந்து வாழ வருமாறு கணவன் அழைத்த போது சேர்ந்து வாழ மறுத்த மனைவியை ஆத்திரமுற்ற கணவன் மதுப்போத்தலால் தாக்கி, உடைந்த போத்தலால் வயிற்றில் குத்திய சம்பவம் துன்னாலை வடக்குப் பகுதியில் இடம் பெற்றுள்ளது:

இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது.

முதலில் திருமணம் செய்து மனைவியைப் பிரிந்து வாழ்ந்தவர் பின்னர் மீண்டும் ஒரு பெண்ணைத் திருமணம் செய்திருந்தார். ஆனால் அவருடனும் ஏற்பட்ட மனக்கசப்பால் இருவரும் பிரிந்து வாழ்ந்து வருகின்றனர், சம்பவ தினம் மாலை 5.30 மணியளவில் இரண்டாவது மனைவியைச் சந்தித்த அந்த நபர் தன்னுடன் மீண்டும் சேர்ந்து வாழ வருமாறு அழைத்துள்ளார். மனைவி அதற்கு மறுத்ததும் கடும் கோபம் கொண்டு கையில் வைத்திருந்த மதுப் போத்தலால் மனைவியின் தலையில் தாக்கியுள்ளார். போத்தல் உடைந்ததும் அதனால் மனைவியின் வயிற்றில் குத்தியுள்ளார். இதனால் படுகாயமடைந்த மனைவி மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ–109-9)

# வலி. மேற்கிற்கு மின் வழங்க ஆரம்பக்கட்ட ஏற்பாடுகள்

மூளாய், ஏப். 23

வலிகாமம் மேற்குப் பகுதிகளுக்கும் மின்சார விநியோகத்தை வழங்குவதற்குரிய ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேற்படி பகுதிகளில் சேதமடைந்திருக்கும் மின் விநியோக மார்க்கங்களை திருத்தி அமைக்கவும், புதிய மார்க்கங்கள் (கேபிள்லைன்) உருவாக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இதற்கான முதற்கட்ட நடவடிக்கையாக மேற்படி வேலைகளை மேற்கொள்வதற்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. (ஐ-99)

# வைத்தியநிபுணர் இல்லை

யாழ். மார்பு நோய்ச் சிகிச்சை நிலையத்தில் அனுபவம்மிக்க வைத்திய நிபுணர்கள் எவரும் கடமையில் ஈடுபடுத்தப்படாமையினால் நோயாளிகள் பாதிக்கப்படுகின்றனர்.

மயிலிட்டி மார்பு நோய் வைத்தியசாலை சாவகச்சேரியில் இயங்குகிறது. யாழ். ஆஸ்பத்திரி வீதியில் இயங்கும் சிகிச்சை நிலையத்தில் நோயாளிகள் பரிசோதிக்கப்பட்டு இங்கு அனுமதிக்கப்படுகின்றனர். ஆனால் இங்கு வைத்திய நிபுணர் எவரும் கடமையிலில்லை. சாதாரண வைத்திய அதிகாரிகளே செயற்படுகின்றனர். (ஐ.154)

# தச்சுத் தொழிலாளருக்கு சுழற்சி முறைக் கடன்

வலிகாமம் தெற்கு, ஏப். 23

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் நுண்கருத்திட்டத்தின் கீழ் சுயதொழிலை ஊக்குவிக்கும் நோக்குடன் தாவடியைச் சேர்ந்த தச்சுத் தொழிலாளர்கள் பத்துப் பேருக்கு தலா பத்தாயிரம் ரூபா வீதம் 4 லட்சத்து 70 ஆயிரம் ரூபா சுழற்சி முறைக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

தாவடியில் உள்ள காளி கோயிலடி காமாட்சி சனசமூக நிலையத்தில் வைத்து பத்து பயனாளிகளுக்கு தச்சுத் தொழில் உபகரணக் கொள்வனவுகளுக்காக இக் கடன் வலிகாமம் தெற்கு பிரதேச செயலகத்தினூடாக விநியோகிக்கப்பட்டது.

வலி- தெற்கு பிரதேச செயலக திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் த. தேவராஜன், தாவடி கிராம சேவையாளர், சமூக சேவை உத்தியோகத்தர் போன்றோரும் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ஐ–152)

## பட்டப்படிப்புக்காக

# படிப்பு லீவு பெறாத ஆசிரியர் விவரம் சேகரிப்பு

வலிகாமம் தெற்கு, ஏப். 23

ஆசிரியசேவையில் இருந்து கொண்டு முறையான படிப்பு லீவு பெறாமல் பல்கலைக்கழகங்களில் உள்வாரி மாணவர்களாகப் பயின்று பட்டம் பெற்ற ஆசிரியர்கள் தொடர்பான விவரங்களை கோட்டக் கல்வி அலுவலகங்கள் மூலம் கல்விச் சேவைக் குழு திரட்டி வருகின்றது.

இவ்வாறு ஆசிரிய சேவையில் உள்ளபோது முறையான படிப்பு லீவு பெறாமல் பல்கலைக்கழகங்களில் உள்வாரி மாணவர்களாக கற்று பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கு பட்டதாரி ஆசிரிய நியமனம் வழங்குதல் சம்பந்தமான தீர்மானம் ஒன்றை எடுக்கும் பொருட்டே இவர்களுடைய விவரங்கள் திரட்டப்படுவதாகத் தெரியவருகிறது. (ஐ–152)

# மருந்துக்குப் பற்றாக்குறை

மந்திகை மருத்துவமனையில் சில பிரதான மருந்து வகைகளுக்குப் பற்றாக்குறை நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நீரிழிவு நோய்க்குரிய இன்சுலின், இரத்த அழுத்த நோய்க்கான அல்டமெற் போன்ற மருந்து வகைகளுக்கே தட்டுப்பாடு நிலவுவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# மாலையில் வீட்டுக்குள் புகுந்து மறைந்திருந்து நள்ளிரவு திருட்டு

## திருநெல்வேலி மேற்கில் துணிகர சம்பவம்

யாழ்ப்பாணம், ஏப். 23

திருநெல்வேலி மேற்கு நாவலடிலேன் பகுதியிலுள்ள ஒரு வீட்டில் இருந்து 50 பவுண் நகைகள் நேற்று அதிகாலை 2 மணியளவில் களவாடப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் மாலையிலேயே வீட்டின் உள் சென்ற திருடர்கள் மறைவான இடமொன்றில் மறைந்திருந்து நள்ளிரவு வேளை நகைகளைத் திருடிக் கொண்டு தப்பிச் சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வீட்டுக்காரர் அதிகாலை நித்திரைவிட்டு எழுந்து பார்த்த போது வீட்டுக் கதவுகள், அலுமாரிக் கதவுகள் திறக்கப்பட்டிருப்பதைக் கண்டே பின்னரே திருட்டு நடைபெற்றதை அறிந்துள்ளார்.

அண்மைய பல மாதங்களாக திருநெல்வேலி நாவலடிலேன், தாளையடிலேன், பிள்ளையார் வீதிப் பகுதிகளில் பகல், இரவு நேரக் களவுகள் அடிக்கடி இடம் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ–7)

# விஞ்ஞான ஆய்வுகளை மேற்கொள்ளவிண்ணப்பம்

வலி. தென்மேற்கு, ஏப். 23

பேராதனைப் பல்கலைக் கழக பட்டப்பின் கல்வி நிறுவனம் விஞ்ஞான ரீதியான ஆய்வுகளை மேற்கொள்ள நாடளாவிய ரீதியில் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

1997 ஜி.சீ.ஈ. உயர்தரவிஞ்ஞானப்பிரிவில்4 'ஏ' அல்லது 4 'பி' க்குக்கூடுதலாகச் சித்தி பெற்ற மாணவர்கள் இவ் ஆய்வுப் பணியில் ஈடுபட விண்ணப்பிக்கலாம்.

கற்கைகாலம் பத்துமுதல் பன்னிரெண்டு மாதங்களைக் கொண்டதாக இருக்கும். தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு மாதாந்தப்படியாக இரண்டாயிரத்து 500 ரூபா வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் இம் மாத இறுதிக்குள் அனுப்பி வைக்கப்பட வேண்டும் எனவும் ஆய்வுக்கான கற்கை நெறி ஜூன் மாதமளவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-185)

# கலட்டியில் கைதான மூவர் அனுராதபுரத்தில்

யாழ்ப்பாணம், ஏப். 23

யாழ்ப்பாணம் கலட்டிப் பகுதியில் கடந்த இருமாதங்களுக்கு முன்னர் படையினரால் கைது செய்யப்பட்ட இருயுவதிகளும் ஓர் இளைஞரும் தற்போது அனுராதபுரத்தில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகத் தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் அவர்களது உறவினர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மூவரின் கைது தொடர்பாகவும் அவர்கள் எங்கு தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது தெரியவில்லை என்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய செயலகத்தில் உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டது.

தேசிய மனித உரிமை ஆணைக்குழுவினர் பல தடுப்பு முகாம்களிலும் இவர்கள்தொடர்பாகத்தொடர்பு கொண்டபோது அனுராதபுரம் தடுப்பு முகாமில் இவர்கள் தடுத்து வைக்கப்படிருப்பது தெரியவந்தது.

தடுப்புக்காவலில் உள்ள மூவரையும் அனுராதபுரம் சென்று பார்வையிடுவதற்கு அவர்களது உறவினர்களுக்கு போக்குவரத்து முன்னுரிமை வழங்க தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளது. (ஐ-5)

# பஸ்களின் இருக்கைகளை சேதமாக்காதீர்கள்!

## பயணிகளிடம் கோரிக்கை

பஸ் வண்டிகளின் இருக்கைகளை சேதப்படுத்தாது ஒத்துழைப்பு வழங்குமாறு வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பொது முகாமையாளர் எஸ். சொக்கலிங்கம் பொது மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அண்மையில் கிடைத்த பஸ் வண்டிகளைக் கொண்டு பல புதிய வழித் தடங்களில் பஸ் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பெரும்பாலான பஸ்களில் இருக்கைகள் சேதப்படுத்தப்படுவது வழக்கமாகி விட்டது. இதனால் பயணிகளுக்கு அசௌகரியம் ஏற்படுவதுடன் சபைக்கும் நஷ்டம் ஏற்படுகிறது. எனவே இருக்கைகளைப் பேணுவதில் பயணிகள் ஒத்துழைப்புத்தர வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-103)

# 6 ஆயிரத்து 750 மண்வெட்டிகள் விநியோகிக்க தயாராக உள்ளன

திருநெல்வேலி, ஏப். 23

உலக உணவு நிறுவனத்தினால் நோர்வே நாட்டு உதவித் திட்டத்தின் கீழ் இங்கு கொண்டுவரப்பட்டுள்ள 6 ஆயிரத்து 750 மண் வெட்டிகளை அடுத்த மாதமுற்பகுதியில் விவசாயிகளுக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போது யாழ். மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் பணிமனையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கும் இந்த மண்வெட்டிகள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக அவ்வப் பகுதி விவசாய சம்மேளனங்களின் சிபார்சுக்கிணங்க கிராம அலுவலர், விவசாய போதனாசிரியர் ஆகியோரின் அனுசரணையுடன் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படவுள்ளன.

யாழ். மாவட்ட உதவி விவசாயப்பணிப்பாளர் த. சிவலோகநாதன் இத்தக்வல்களைத் தெரிவித்தார். (ஐ–135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சொந்தப்பாவனையிலுள்ள 9ஸ்ரீ தொடர் இலக்கமுடைய மொறிஸ்மரீனா கார் (என்ஜின் ஸ்ரான்டெட்) விற்பனைக்குண்டு. சகல திருத்த வேலைகளும் செய்யப்பட்டுள்ளது. தொடர்பு: 806, முத்திரைச்சந்தி, பருத்தித்துறை வீதி, நல்லூர். [55115]

பாவனையிலுள்ள பரல் தகரம் சீற் - 52 விற்பனைக்குண்டு. மலிவான விலையில் கொடுக்கப்படும். தொடர்பு: அற்புதநர்த்தன விநாயகர் ஆலயம், பலாலி வீதி, கோண்டாவில் கிழக்குச்சந்தி. [55107]

பருத்தித்துறை மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள பாமா மருந்தகத்தில் கடைப்பாவனைக்குரிய நல்ல றாக்குகள் (Wooden. Racks) பெரியது -2, சிறியது -2, விற்பனைக்குண்டு. தொடர்பு: சச்சிதானந்தம் புவனேஸ்வரி, வெல்லிக்கம் தோட்டம் பிள்ளையார் கோயிலடி, துன்னாலை கிழக்கு, கரவெட்டி. (55121)

### மணமகள் தேவை

யாழ். கத்தோலிக்க கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த வெளிநாட்டில் Technician ஆக தொழில் புரியும் 30 வயது, உயரம் 5 அடி 3 அங்குலம் உடைய மணமகனுக்குத் தகுந்த மணமகளை எதிர்பார்க்கின்றனர். புகைப்படத்துடன் நேரில்வரவும். தேவா, சுவாமியார் வீதி, கொழும்புத்துறை. [55085]

### ENGLISH

6 ஆம், 9 ஆம் ஆண்டுகளுக்கு வாரம் 3 வகுப்புக்கள். மாதாந்தப் பரீட்சைகளுடன் விசேட வகுப்புக்களும், ஏனைய ஆண்டுகளுக்குமுரிய ஆங்கில விசேட வகுப்புக்களும், வழமை போல் நடைபெறுகின்றன, விவரங்கள் நேரில். ஆசிரியர்: T, Sagathevan B A. London, 46, பிரப்பங்குளம் லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். [55096]

### தெளிவாகப் பார்க்க

ரி.வி. நிகழ்ச்சிகளை தெளிவாகப் பார்ப்பதற்கு புதிய அன்ரனாக்களைப் பொருத்தவும், உங்கள் பழைய அன்ரனாக்களைத் திருத்திப் பொருத்துவதற்கும், பூஸ்ரர்களை பழுது பார்ப்பதற்கும் நாடுங்கள்: வீனஸ் தனபாலசிங்கம் B. Sc. Ceylon Dip. in Electronic Engineering London)- 284. ஸ்ரான்லி வீதி, (நாகவிகாரை முன்பாக) யாழ்ப்பாணம். [சி/3295]

### திருமணசேவை

எங்களிடம் எல்லா மதத்தினருக்கும், டாக்டர், எஞ்சினியர், எக்கவுண்டன், பட்டதாரிகள் உண்டு. குறிப்பு புகைப்படத்துடன் தொடர்பு கொள்ளவும்: துர்க்கா திருமண சேவை, 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (55118)

### வாடகைக்கு

பருத்தித்துறை மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள பிரதான வீதியில் அமைந்துள்ள 'பாமா மருந்தகம்' நடைபெற்ற கடை உடனடியாக வாடகைக்கு விடப்படும்- தொடர்பு:- சச்சிதானந்தம் புவனேஸ்வரி, வெல்லிக்கம் தோட்டம் பிள்ளையார் கோயிலடி, துன்னாலை கிழக்கு, கரவெட்டி. (55122)

---

## யா/ சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி

பழைய மாணவர் சங்கம்

## பொதுச் சபைக் கூட்டம்

தலைவர்: திரு. கா. சந்திரபாலன் அதிபர்
இடம்: கல்லூரி பிரதான மண்டபம்
காலம்: 26-04-98 ஞாயிறு முற்பகல் 9.30 மணி (இலங்கை நேரம்)

பிரதம விருந்தினர்

**திரு. சு. கணபதிப்பிள்ளை**

(பிரதிக் கல்விப் பணிப்பாளர், யாழ். வலயம் - 2)

பழைய மாணவர்களை தவறாது சமுகந்தருமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

கா. சந்திரபாலன் — தலைவர் (அதிபர்)
தி. உதயசூரியன் — கௌரவ செயலாளர்.

(55124)

---

உ

## ஆசார்யாபிஷேக அழைப்பு
## குருப்பட்டம் வழங்கல்

அன்புடையீர் ஸ்வஸ்தி ஸ்ரீ

நிகழும் மங்களகரமான வெகுதானிய வருஷம் சித்திரை மாதம் 11 ஆம் நாள் [ 24 - 04 - 98 ] வெள்ளிக்கிழமை உத்திரட்டாதி நட்சத்திரமும் இடப லக்கினமும், வைகிருதி யோகமும் கரசகரணமும் கூடிய 7. 20 மணி தொடக்கம் 9. 11 வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்

பிரம்மஸ்ரீ மு. சோமசுந்தரஐயர் அவர்களின் பௌத்திரனும், எமது புத்திரனுமாகிய சிரஞ்சீவி பிரம்மஸ்ரீ

**மு. சண்முகராசசர்மாவிற்கு**

திக்கரை முருகன் திருவருளை முன்னிட்டு மேற்படி தேவஸ்தான மண்டபத்தில் சமய விசேட நிர்வாண தீட்சையும், ஆசார்யாபிஷேகமும் செய்ய நிச்சயிக்கப் பட்டுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராகச் சமுகந் தந்து குமாரனை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

சோ. குகநேசசர்மா
பூமகாலக்ஷ்மி அம்மா தம்பதிகள்
திக்கரைமுருகன் தேவஸ்தானம்.

திக்கரை, களபூமி,
காரை நகர். (55114)

---

## 2-ம் வருட நினைவஞ்சலி



திருமதி
## தனேஸ்வரி செல்வரத்தினம்
[தங்கா]
(ஆசிரியை, யா/துரையப்பா வித்தியாலயம்)

பிறப்பு: 03 — 03 — 1947
இறப்பு: 23 — 04 — 1996
திதி: 01 - 05 - 1998

இரண்டு ஆண்டுகள் முடிந்துவிட்டன; உமது நினைவுகள் ஒருபோதும் எங்கள் மனதை விட்டு அகலாது,

உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

- குடும்பத்தினர்

65, கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (55091)

---

## சுகாதார ஊழியருக்கு சீருடை வழங்க ஏற்பாடு

திருநெல்வேலி ஏப். 23

யாழ். மாவட்டத்திலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளிலும் மற்றும் சுகாதாரத் திணைக்கள நிறுவனங்களிலும் கடமையாற்றி வரும் ஊழியர்களுக்கு இவ்வருடத்திற்கான இலவச சீருடைகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதற்கான விவரங்கள் யாழ். சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனையினால் நிறுவனத் தலைவர்களிடமிருந்து சேகரிக்கப்பட்டு வருகின்றன. (ஐ - 135)

## முட்டையிடும்கோழிக்கான தீனிக்குத் தட்டுப்பாடு

யாழ்ப்பாணத்தில் முட்டையிடும் கோழிகளுக்கான தீனிக்கு தொடர்ந்து தட்டுப்பாடு நிலவி வருகிறது.

கொழும்பில் இருந்து முட்டையிடும் கோழித்தீனி எடுத்துவரப்படாததே இத் தட்டுப்பாட்டுக்கு காரணமாகும்.

தற்போது முட்டையிடும் தீனியின் விலை அதிகரித்துள்ளது

அத்துடன் சில இடங்களில் கலப்படம் செய்யப்பட்ட தீனி விற்கப்படுகின்றது.

இதேசமயம் கூட்டுறவு உற்பத்தி சந்தைப்படுத்தல் சமாசம் முட்டையிடும் கோழிகளுக்கான தீனியை எடுத்து வருவதற்கு முயற்சி மேற்கொண்டுள்ளது. (ஐ - 17)

---

## கண்ணீர் அஞ்சலி

ஊரெழு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய பிரதம குரு

## சிவஸ்ரீ ச. பா. வைத்தியநாத சிவாசாரியார்

அவர்களது

மறைவை ஒட்டி ஊரெழு வாழ் சைவ மக்கள் அனைவரும் ஆறாத்துயரில் மூழ்கியுள்ளோம். அன்னாரின் மறைவு எமது ஆலயத்திற்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்.

அன்னாரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

-ஆலய நிர்வாக சபை

(55120)

---

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



திருமதி
## புவனேஸ்வரி கந்தையா

தோற்றம்: 30 - 12 - 1926
மறைவு: 24 - 03 - 1998

சிறுப்பிட்டி தெற்கு, மயில்வாகனம் கந்தையாவின் மனைவி புவனேஸ்வரியின் வீட்டுக்கிருத்தியம் இன்று (23 - 04 - 98) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது என்பதை அறியத்தருகின்றேன். அத்துடன் இன்று நிகழவுள்ள மதிய போசனத்திலும் பங்கு கொண்டு மகிழ்விக்குமாறு வேண்டுகின்றேன்.

மரணச்சடங்கு நிகழ்ந்த சமயம் எமக்கு பலவழிகளிலும் உதவிபுரிந்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தனித்தனியாக நேரில் அறிவிக்க முடியாததால் மன்னித்து சமுகமளிக்குமாறு வேண்டுகின்றேன்.

ம. கந்தையா
(இளைப்பாறிய ஆசிரியர்)

செல்ல மாணிக்கப்பிள்ளையார் கோயிலடி,
சிறுப்பிட்டி தெற்கு. (சி-3514)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## சமிக்ஞை இதுதானோ!

சித்திரைப் புத்தாண்டு பிறந்து ஒரு வார காலத்தில் வன்னியில் – ஒலுமடுப் பிரதேசத்தில் – கடும் சண்டை தொடங்கியது.

சித்திரைப் புத்தாண்டு, தமிழ்–சிங்களப் புத்தாண்டு என்றும் அழைக்கப்படும். சிங்களவர்களும் தமிழர்களும், பௌத்தர்களும் இந்துக்களும், புத்தாண்டைக் கொண்டாடுவதில் உள்ள ஒற்றுமை குறித்துப் பத்திரிகைகளில் எழுதப்பட்ட, விழாக்களில் பேசப்பட்ட ஒரு சில நாள்களில் போர் தொடங்கப்பட்டுள்ளது.

அமெரிக்க அதிபர் பில் கிளின்டனின் விசேட தூதுவர் பில் றிச்சார்ட்சன் தலைமையில் உயர்மட்டக் குழு ஒன்று கொழும்பு வந்து சென்ற இரண்டு நாள்களில் —

பொதுநலவாய நாடுகளின் செயலாளர் நாயகம் எமேகா அன்யோகோ கொழும்பு வந்து சென்ற ஒரு நாள் இடைவெளியில் —

அரச படைகள் மீண்டும் போரைத் தொடங்கின.

இத்தனைக்கும் அமெரிக்க உயர்மட்டக் குழுவும், பொதுநலவாய நாடுகளின் செயலாளர் நாயகமும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்று வலியுறுத்தினர். இலங்கை அரசாங்கம் விரும்பினால் அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் மத்தியஸ்தம் வகிக்கத் தயார் என்றும் கூறிச்சென்றனர். இவை பற்றிய சாதக பாதகங்கள், உள்நோக்கங்கள், உண்மையான நிலைப்பாடுகள் குறித்த தெளிவான தகவல்கள், விமர்சனங்கள் வெளியாவதற்கு முன்னரே "வெற்றி உறுதியை" முன்னெடுத்துவிட்டனர் படையினர்!

அமெரிக்க உயர்மட்டக் குழுவைப் பொறுத்தவரை மிக முழுமையாக அரசாங்கத்தின் பக்கத்துக்கு நின்றே பேசியது. எனினும் பெயருக்கு மத்தியஸ்தம் குறித்தும் பிரஸ்தாபித்தது. பொதுநலவாய நாடுகளின் செயலாளர் நாயகம், போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு உதவத் தயார் என்று விசேடமாகக் கூறியிருந்தார்.

மத்தியஸ்த முயற்சிகள் ஆரம்பமாக வேண்டுமெனில் விருப்பமுடைய சாராருடன் தொடர்பு கொண்டு முன்னெடுக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தினுடையதே.

இரண்டு முக்கிய சர்வதேசப் பிரமுகர்கள் மத்தியஸ்தம் குறித்துப் பேசிய வாய் மூடுவதற்கு முன்னர், இலங்கை அரச படைகள் "போட்டு விட்டுக்கிடந்த" போரை மீண்டும் தலையில் தூக்கி "உரு" ஏற்றியுள்ளன; பொறி கிளப்பி உள்ளன.

இது எதற்கான சமிக்ஞை?

மத்தியஸ்தம், பேச்சுவார்த்தை, போரை முடிவுக்குக் கொண்டு வருதல் ஆகியவற்றில் எமக்கு அக்கறை இல்லை. கால அட்டவணையோ, அரசியல் இலக்கோ இல்லாத "வெற்றி உறுதி"யில் வெற்றி கண்ட பின்னரே இவற்றை எல்லாம் காதில் போட்டுக் கொள்வோம் —

அதற்கு முன்னர், எந்தக் கடவுள் உதவி செய்ய முன்வந்தாலும் நாம் பொருட்படுத்த மாட்டோம்—என்ற சமிக்ஞை அன்றி, வேறென்ன இது?!

# பனைவளம் அழிந்துபோகும் ஆபத்து; கடல்வளம் தடையால் வீணாகிறது

பா. யூடி ரமேஸ் ஜெயக்குமார்

முற்றுப்பெறாமல் இடையிடையேவிழுந்த காற்புள்ளிகளுடன் யுத்தம் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றது. இழப்புகளும், அழிவுகளும், மரணங்களும், பிரிவுகளும் நாளாந்த வாழ்வுடன் இரண்டறக்கலந்துள்ளன. வரலாறு காணாத இடப்பெயர்வுகளும், நடந்தும், தொடர்ந்தும் கொண்டிருக்கின்றன.

"சூரியப்பிரகாசம்" இராணுவ நடவடிக்கையின் போது ஒட்டுமொத்தமாக வலிகாமமே இடம்பெயர்ந்தது. இப்போது, இடம்பெயர்ந்த களைப்பு ஆறமுன்னர் குடாநாடு தன்மக்களை உள்வாங்கிக் கொண்டிருக்கின்றது. மண்ணில் உருதெரியாமல் புதைத்த பொறிவெடிகள் காலை கழற்ற வைத்த போதும் தமது சொந்தவீடுகளில் வாழும் சந்தோஷத்தை ஒவ்வொரு சாமானிய மகனும் அனுபவிக்கவே விரும்புகின்றான.

வரலாறான இடம்பெயர்வு பதித்துவைத்துள்ள பின்னடைவுகள் ஏராளம். எதை இழந்தபோதும் இழக்காத சொத்தாக தமிழர்களின் வரலாறாக இடம்பிடித்திருந்தது கல்வி. அண்மைக்கால யுத்த நடவடிக்கைகளும், இடம்பெயர்வுகளும் கல்வித் துறையிலும் கறை ஏற்படுத்திச் சென்றுவிட்டதாக கல்விமான்களும் ஆராய்ச்சியாளர்களும் கருத்துத்தெரிவித்துக் கொண்டிருக்கின்றனர். அதில் உண்மையில்லாமல் இல்லை.

யாழ். குடாநாட்டின் கல்வி நிலைமை எந்த வகையில் உள்ளது என்பதை அறிவதில் யாழ். மருத்துவபீடத்தின் சமுதாய மருத்துவத் துறையினரும் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினரும் கூட்டாக ஆய்வில் இறங்கியுள்ளார்கள்.

பொதுவாக, பாடசாலைப் பராயமான 5 – 19 வயதிற்கு இடைப்பட்டவர்களில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. குடாநாட்டின் ஐம்பதுக்கும் மேற்பட்ட கிராம சேவையாளர் பிரிவுகள் இவ்வாய்விற்கு உட்படுத்தப்பட்டு ஏறக்குறைய 5 மாத காலப்பகுதியில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டு தற்போது இறுதி முடிவுகளுக்கான பூர்வாங்க வேலைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

இந்த ஆய்வுக்குத் தெரிவு செய்யப்பட்ட ஒரு பிரதேசமே எழுவைதீவாகும்.

சுற்றிவர ஆர்ப்பரிக்கும் அலைகடலுக்குள் எழுந்திருக்கும் ஒரு தீவில் வாழும் மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்களும், துன்பங்களும பொதுவாக எல்லாத் தீவு மக்களின் பிரச்சினைகளை ஒத்திருக்கின்றன. எனவே எழுவை தீவில் வாழும் மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்களும் அவர்களின் தேவைகளும் தனிய எழுவை தீவுக்கு மட்டும் உரியதல்ல.

### அமைவிடம்

இலங்கைதீவிற்குள் மேலும் தீவுகளை கொண்ட மாவட்டமாக யாழ்ப்பாணம் நிமிர்ந்து நிற்கின்றது. இதில் ஒரு தீவே எழுவை தீவாகும். தன்னைச் சுற்றிலும் காரைநகர், ஊர்காவற்றுறை, பருத்தித்தீவு, புங்குடுதீவு, நயினாதீவு என்பவற்றை கொண்டுள்ளது. யாழ். பஸ்தரிப்பு நிலையத்தில் இருந்து பிரயாணத்தை ஆரம்பிக்கும் ஒருவர் வண்டியில் ஊர்காவற்றுறை இறங்குதுறை மட்டுமே செல்ல முடியும். ஊர்காவற்றுறை இறங்குதுறையில் இருந்து மேற்கே 20 கடல்மைல் தொலைவில் எழுவைதீவு உள்ளது. கொந்தளிப்பற்ற கடலில் 40குதிரை வலுக் கொண்ட படகு குறித்த தீவை சென்றடைய அரைமணிநேரம்பிடிக்கிறது.

இத்தீவு சுமார் 5 மைல் நீள அகலப்போக்கில் நில விஸ்தீரணத்தை கொண்டுள்ளது. அடர்த்தியாக பனைகள் காணப்படுகின்றன. மிக இலகுவாக இனங்காணக்கூடிய நிலையில் விண்ணை முட்டிமோதும் உயரத்தில் பனை வளர்ந்திருப்பது எழுவை தீவுக்கு உரிய சிறப்பம்சமாகும்.

### மக்கள் தொகை

ஐந்து சதுரமைல் விஸ்தீரணம் இருந்த போதிலும் அங்கு மக்கள் தொகை செறிவாக இல்லை. குறிப்பிட்ட சில இடங்களில் மட்டுமே மக்கள் சமுதாயமாக வாழ்கிறார்கள். மற்றும்படி ஏனைய இடங்கள் வெறுமையாகவேஇருக்கின்றன. 90ஆம் ஆண்டுக்கு முன்னர்வரை இங்கு 175 குடும்பங்களைச் சேர்ந்த 750 பேர்வரை இருந்துள்ளார்கள். அதே காலப்பகுதியில் அங்கு ஏற்பட்ட இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து 25 குடும்பங்கள் வரை இந்தியா சென்றுள்ளனர். இவ்வாறு இந்தியா சென்ற குடும்பங்கள் திருச்சி கோட்டைப் பட்டுமுகாமிலும், புதுக் கோட்டை வேணாவிளக்கு முகாமிலும் தங்கியிருப்பதாக ஊர் வாசியான யேசுதாசன் எடுத்துக் கூறினார்.

இங்குள்ள மக்களின் நிரந்தர தொழில் மீன்பிடித்தலாகும். தவிர மாரிகாலங்களில் விவசாயச் செய்கையிலும் இம்மக்கள் ஆர்வங் காட்டி வருகின்றனர்.

### தொழில்

நாலாபுறமும் புடைசூழ்ந்துள்ள அலைகடலில் இருந்து கிள்ளிஅல்ல அள்ளியெடுக்கக் கூடிய தொகையில் தொழில் வாய்ப்பு இருந்த போதும், தற்போதைய இறுக்கமான கடல்வலயச் சட்டம் தொழிலின மூலத்துக்கே ஆப்புவைத்து நிற்கின்றது. இங்குள்ள பெரும்பாலான மக்களுடன் பேசும் சந்தர்ப்பம் கிடைத்தது. அங்குள்ள எல்லா மக்களினதும் ஒரே குறை கடற்றொழில் செய்வதில் உள்ள தடைகளை நீக்க வேண்டும் என்பதே யாகும். அதிகாலை $5\frac{1}{2}$மணி தொடக்கம் மாலை $3\frac{1}{2}$ மணி வரையுமேகடலில் நின்று தொழில் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. அதுவும் குறிப்பிட்ட எல்லைக் கோட்டிற்கு உள்தான் மீன்பிடிக்க முடியும். வெளியிணைப்பு இயந்திரங்கள் பொருத்தப்பட்ட இயந்திர படகுகளை இத்தொழிலுக்காக பாவிக்க முடியாது.

## எழுவை தீவில் ஓர் ஆய்வு

இவ்வளவு இறுக்கமான சட்ட திட்டங்களிற்கும் முகங்கொடுத்து தமது தொழிலை மேற்கொள்கின்ற மீனவர்களுக்கு, அவர்கள் பிடிக்கும் மீனுக்குரிய விலைவாசி கிட்டவில்லையென்ற கவலை மனத்திடையே இருக்கத்தான் செய்கிறது. தற்போது கருவாட்டுக்கு பேர்போன 'கட்டா' பிடிபடும் காலப்பகுதி ஒரு கிலோகட்டாவை பச்சையாக 40 ரூபாவுக்கே விற்க முடிவதாக ஒரு தொழிலாளி கவலைப்பட்டார். கருவாடாக்கி விற்பனை செய்ய வென்றாலும் தவித்த முயலடிக்கும் வியாபாரிகளின் பேச்சுத்திறமைக்கு முன் தங்கள் கஷ்டம் பொய்த்து விடுமென்றார் ஒருவர். இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட துறை சார்ந்த அதிகாரிகளும், நிர்வாக அலகை இயக்குவோரும் கவனத்தில் எடுத்து தங்கள் துயரங்களை போக்க முன்வர வேண்டுமென்றும் அம்மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

### பாலைவனம்

5 சதுரமைல் விஸ்தீரணத்தைக் கொண்ட இத்தீவில் இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட பனைமரங்கள் இருப்பது குடாநாட்டை பொறுத்தவரை சிறப்பம்சம் ஆகும். அண்மைக்கால இராணுவ நடவடிக்கைகளின் போது விமான, எறிகணை தாக்குதல்களுக்கு முறிந்து போனவற்றை தவிர, காவலரண்களை பலப்படுத்துதற்கும் பனைகள், பெரும்பாலும் குடாநாட்டின் எல்லாப் பகுதிகளில் அழிக்கப்பட்டுள்ளன. ஆனால் இவ்வாறான அழிவுகள் வேலணை, ஊர்காவற்றுறை காரைநகர் தவிர்ந்த எந்த தீவுகளிலும் இல்லை.

எழுவைதீவில் எழுந்து நிற்கும் ஒவ்வொரு பனையும் பொன் வயதைத் தாண்டியே நிற்கின்றன. ஆனால் அங்குள்ள இவ்வளம் எதிர்காலத்தில் அழிந்து போவதற்குரிய சான்றுகள் நிறையவே இருக்கின்றன.

அவ்வாறான அழிவை தெளிவாக விளக்கிய கிராம வாசியான க. செபஸ்தி இவ்வாறு கூறினார்.

இத்தீவில்ஆரம்பந்தொட்டு இருந்த பனைகளைத் தவிர இடை நடுகை இல்லை அதாவது முதிர்ந்து முறியும் ஒரு பனையின் வெற்றிடத்தை நிரப்புவதற்கு புதிதாக பனைகள்நடப்படவில்லை. பனைகள்அங்கு அழிந்து கொண்டிருப்பதற்கு அடிப்படைக் காரணம் கால்நடைகளாகும். இங்குள்ள ஆடு, மாடுகளின் பிரதான தீவனம் பனையோலைகளேயாகும்.

கால்நடைகள் பனையோலைகளை உண்பது அலாதியானது. நடுநரம்பு அப்படியே இருக்க இலையை மட்டும் வார்ந்து எடுப்பது போல் தமது பற்களாலும் தாடைகளாலும் உண்டு விடுகின்றன. விழுந்து முளைக்கும் பனை விதைகள் மரங்களாக வளர்வதற்கு கட்டாக்காலி மாடுகள் இருக்கும் வரை சாத்தியக் கூறுகளே இல்லை. பனை வளத்தைப் பொறுத்த வரை வெள்ளம் வந்து விட்டது என்றார் ஊரவர் ஒருவர்.

இங்குள்ள பனை வளத்தை முழுமையாக பயன்படுத்தினால் எழுவை தீவில் அபிவிருத்தி கண்டுவிடலாம். இவ்வளவிற்கு தேவையான மூல வளம் அங்கு காணப்படுகின்றது. இங்குள்ள ஒரு சில குடும்பங்கள் மட்டுமே இன்றும் பனம் பொருள்களை உற்பத்தி செய்கின்றன. அவர்கள் உற்பத்தி செய்யும் பனம் பொருள்களுக்கும் உரிய விலை கிடைக்கவில்லை என்று கவலைப்படுகின்றனர் அங்குள்ள மக்கள். இது விடயமாக வடமாகாண பனை அபிவிருத்திச் சபை கட்டாயம் சிரத்தை எடுக்க வேண்டும் என்று அங்குள்ள மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

இவ்விரண்டு தொழில்களையும தவிர ஒரு சில குடும்பங்கள் சிறிய அளவில் விவசாயச் செய்கையிலும் ஈடுபட்டுள்ளனர். அங்கு உற்பத்தியாகும் காய்கறி வகைகள் அம்மக்களின்உணவுத்தேவையோடு சரியாகி விடுகின்றன.

(வளரும்)

## சாயி சிந்தனை

ஞானம்என்றால்'சைதன்யம்'மட்டுமேயன்றி உலக சம்பந்தமான படைக்கப்பட்ட பொருள்களைப் பற்றிய அறிவு "ஞான"மாகாது. எந்த "சைதன்ய சக்தி" மரங்களையும் செடிகளையும் தழைக்க வைக்கிறதோ, மற்ற உயிர் வாழும் பிராணிகளை உயிருடன் இயங்கச் செய்கிறதோ, அந்த சைதன்ய சக்தியை உணர்தலே உண்மையில் ஞானமாகும்.

தியாகராஜர் தமது கீர்த்தனையில் "சிறிய எறும்பிலும் பிரம்மத்திலும் சிவ விஷ்ணு சொரூபங்களிலும் எல்லாவற்றிலும் பிரேமையாக வியாபித்து இருக்கும் ராமா என்னைக் காத்தருள்வாய்" என்று உளமுருகிப் பாடியுள்ளார். இதுவே எங்கும் நிறைந்த சைதன்ய சக்தி. அதையே அனந்தம் (எல்லையற்றது) என்று குறிப்பிடுகின்றோம்.

யார் யார் எந்தெந்த விதமாகச் சிந்தித்தாலும், எந்தெந்த விதமாகப் பூஜித்தாலும், வணங்கினாலும் அந்தந்தச் சொரூபத்திலேயே, அவர்களுக்குப் பிடித்த வகையிலேயே அவர்களுக்கு அருள்புரியும் இறை சக்தியே இந்த எல்லையற்ற பரம் பொருள் என்று உணருங்கள்.

"எனது அருகில் இருந்து, என்னுள்ளேயுமிருந்து என்னை எப்போதும் காத்தருள்வாய் ஆண்டவா!" என்று தூய உள்ளத்துடன் வேண்டுவோருக்கு அப்படியே அருள் புரிவார் இறைவன். இப்படிப்பட்ட தூய்மையான உள்ளத்தின் குரல் பரம்பொருளின் செவியில் உடனே கேட்கும்.

[ஆதாரம்: சனாதன சாரதி]

### உதயவாக்கு

அடக்கமுள்ள ஒருவன் ஆத்திரப்பட்டால் ஆபத்து.

- ட்ரைன்

### நாளை:

சித்திரை - 11

வெள்ளிக்கிழமை

திதி: திரயோதசி பின்னிரவு 10.29 வரை.

நட்சத்திரம்: உத்தரட்டாதி முன்இரவு 10.41 வரை

பிரதோஷ விரதம்

சுபநேரம்: 6.00 – 7.30

ராகுகாலம்: 10.30–12.00

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஓடத்தொடங்கியதும் பழுது**

# புதிதாக வழங்கிய ஆறு பஸ்கள் பருத்தித்துறை டிப்போவில் முடக்கம்

நெல்லியடி ஏப். 23

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை டிப்போவுக்கு அண்மையில் புதிதாக வழங்கப்பட்ட 10 புதிய பஸ்களில் ஆறு பஸ்கள் பாவிக்க முடியாத அளவு பழுதடைந்துள்ளதாக டிப்போ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கொழும்பிலிருந்துதேர்தல் கடமைக்காக அனுப்பப்பட்ட இந்த பஸ்கள் தரங் குறைந்த பஸ்களாகக் காணப்படுகின்றன. இதனால் இவை இங்கு பயன்படுத்த ஆரம்பித்த உடனேயே பழுதடைந்து நடு வீதிகளில் நின்று விடுவதாகவும் — இதனால் அவற்றைப்பயன்படுத்தாமல் டிப்போவில் விட்டிருப்பதாகவும்—டிப்போவின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த பஸ்களை திருத்திப் பயன்படுத்துவதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. எனினும் இவற்றுக்கு வேண்டிய உதிரிப்பாகங்களை இங்கு பெற முடியாதுள்ளது. இதன் காரணமாகத் திருத்த வேலைகளும் பாதிக்கப்படுகின்றன. கொழும்பில் இருந்து உதிரிப்பாகங்களை எடுத்து வருவதற்கு முயற்சி எடுத்து வருகின்ற போதிலும் இதுவரை உதிரிப்பாகங்கள் வந்து சேரவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை —

யாழ். டிப்போவில் சில பஸ்களும் பழுதடைந்த நிலையில் உதிரிப்பாகங்கள் இன்மையால் பயன்படுத்த முடியாத நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ–9–109–173)

## புலோலிப் பகுதிக்கு மீண்டும் மின் கிடைத்தது

வடமராட்சி, ஏப். 23

பருத்தித்துறை, புலோலிப் பகுதிக்கு மீண்டும் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

இப்பகுதிக்கு மின்சாரத்தை வழங்கி வந்த பருத்தித்துறை டிப்போவில் உள்ள 250 கே. வி. வலுவுள்ள ஜெனரேட்டர் அண்மையில் பழுதடைந்ததையடுத்து ஒரு மாதத்துக்கு மேலாக இப் பகுதிகளுக்கான மின்சார விநியோகம் தடைப்பட்டிருந்தது.

பழுதடைந்த ஜெனரேட்டருக்கான உதிரிப்பாகம் கொழும்பிலிருந்து எடுத்து வரப்பட்டு திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து இப் பகுதிகளுக்கு மீண்டும் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. (ஐ–173)

## 297 மாணவருக்கு கலைமாணிப் பட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 23

யாழ். பல்கலைக்கழகத்தில் வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவு ஆரம்பிக்கப்பட்ட 90 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை 27 மாணவர்கள் வர்த்தக மாணிப்பட்டத்தையும், 297 மாணவர்கள் கலைமாணிப்பட்டத்தையும் பெற்றுள்ளனர் என வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ–7–9)

## வடமராட்சியில் புத்தாண்டு விழா

வடமராட்சிப் பகுதியில் சித்திரைப் புத்தாண்டு விளையாட்டுப் போட்டியும், இசை நிகழ்ச்சியும் எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

விளையாட்டுப் போட்டியில் பிரதான நிகழ்வாக வடமராட்சிப் பிரதேசத்தின் பிரதான வீதிகள் ஊடாக நீண்டதூரசைக்கிளோட்டப் போட்டி, மரதன் ஓட்டப் போட்டி ஆகியன இடம் பெறவுள்ளன, மாலையில் இசை நிகழ்ச்சி இடம்பெறும். (ஐ–173)

## மீன் சந்தைக்கு புதிய கட்டடம்

நெல்லியடி, ஏப். 23

சுமார் 4 லட்சம் ரூபா செலவில் புதிதாக கட்டிமுடிக்கப்பட்ட உடுப்பிட்டி மீன் சந்தைக் கட்டடம் அடுத்தமாத நடுப்பகுதியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

கரவெட்டி பிரதேச செயலரின் வேண்டுதலின் பேரில் யூ. என். எச். சீ. ஆர் இதற்கான நிதியை வழங்கியுள்ளது. (ஐ. 109-173)

## பருத்தித்துறை வல்வைக்கு தொலைபேசி கிடைக்கவில்லை

வடமராட்சி, ஏப். 23

வடமராட்சிப் பகுதியில் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை நகரப்பகுதிகளிலும், புலோலி, உடுப்பிட்டி கிராமப் பகுதிகளிலும் தனியாருக்கு ''மோட்டோறோலோ'' வயர்லெஸ் தொலைபேசி இணைப்புகளோ கேபிள் தொலைபேசி இணைப்புகளோ இதுவரை வழங்கப்படவில்லை.

தொலைபேசி இணைப்புக் கோரி விண்ணப்பித்த பாவனையாளர்கள் தமக்கு தொலைபேசி இணைப்பு வழங்காதது குறித்து கவலை கொண்டுள்ளனர். (ஐ - 173)

## கிராம அபிவிருத்தி சங்கம் புனரமைப்பு

கொழும்புத்துறை, ஏப். 23

மாவிட்டபுரம் கிராம அபிவிருத்திச் சங்கம் யுத்த கால அனர்த்தங்களின் பின் புனரமைக்கப்பட்டு புதிய ஆட்சிக்குழுத் தெரிவு செய்யப்பட்டு தற்போது இயங்கி வருகிறது. (ஐ-30)

# தென்மராட்சி பாலர்கல்வி அபிவிருத்திக்குவித்திட்டவர்

## மணிவிழாவில் பாராட்டு

கைதடி, ஏப். 23

தென்மராட்சியில் பாலர் கல்வி அபிவிருத்திக்கு வித்திட்டவர் ஓய்வுபெற்ற பாடசாலை அதிபர் க. கோபாலகிருஷ்ணன். தமது பிறந்த ஊரான வடமராட்சியை விட்டு தென்மராட்சிக்கு வந்து 32 ஆண்டுகளாக மக்கள் சேவைக்காக தன்னையே அர்ப்பணித்து வருகிறார் அவர்.

கைதடி நவீல்ட் பாடசாலை உப அதிபராக இருந்து ஓய்வுபெற்ற க. கோபாலகிருஷ்ணனின் மணிவிழா நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை மேற்கண்டவாறு தெரிவித்தார். தென்மராட்சி பிரதிக்கல்விப்பணிப்பாளர் நா. சத்தியநாதன் தலைமையில் கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயத்தில் அண்மையில் இம் மணிவிழா நடைபெற்றது.

விழாவுக்கு முன்னதாக மணிவிழா நாயகர் க. கோபாலகிருஷ்ணன் கைதடி இணுங்கித்தோட்டம் கந்தசுவாமி கோயிலிலிருந்து பாடசாலை வரை ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார். மக்கள் கும்பங்கள் வைத்து மலர் மாலைகள் அணிவித்து அவரைவரவேற்றனர். பிரதம விருந்தினரால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதுடன் விழாவில் கூடியிருந்தோர் சார்பில் பாடசாலையின் முறைசாராக்கல்வி ஆங்கிலப் பிரிவைச் சேர்ந்த எஸ். சிவகுமாரன் தங்கமோதிரம் ஒன்றை அணிவித்து கௌரவித்தார்.

பிரதமவிருந்தினர் தமது உரையில் மேலும் கூறியதாவது:-

தென்மராட்சிப் பிரதேசத்தில் இன்று பல மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்வதற்கு பலமான அத்திவாரமாக அமைந்தது இப்பகுதியில்போதிக்கப்பட்ட பாலர் கல்வியே ஆகும். இதற்கு மூல கர்த்தாவாக கோபாலகிருஷ்ணன் இருந்தார். எனவே இன்றைய மணிவிழா நாயகனை கௌரவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன் —என்றார்.

தொழில் அதிபர் இ. குழந்தை வடிவேல், அறவழிக் குழுவினர் தலைவர் வீ. ஜீ. தங்கவேல், அஷ்டலட்சுமி அதிபர் ஆ. கந்தையா, டாக்டர் கே. ரி. எஸ். சபாநாதன், கிராம சேவை உத்தியோகத்தர் சு. செல்வராசா, பாடசாலை அதிபர் ப. செல்லத்துரை, செல்வி எஸ். சஞ்சிகா, ஆ. பிரபாலினி, அ. பாலசுப்பிரமணியம் ஆகியோர் பாராட்டுரைகள் நிகழ்த்தினார்கள்.

யாழ். மத்திய கல்லூரி முன்னாள் அதிபர் நா. க. சண்முகநாதபிள்ளை வாழ்த்துப் பாவினை வாசித்து, வழங்கிக் கௌரவித்தார். மணிவிழா நாயகன் ஏற்புரை நிகழ்த்தினார். (அ-5)

# அரச சுற்றறிக்கைகளும் அமுல் செய்யும் அதிகாரிகளும்

நமது நாட்டில் நிலவுகின்ற அமைதியற்ற அரசியல் சூழலினால் அன்றாடம் எண்ணற்றவர்கள் வலுவிழக்கின்றனர்; காணாமற் போகின்றனர்; கடத்தப்படுகின்றனர்; கைதாகின்றனர்; உயிரிழக்கின்றனர்.

இவர்களை ஒருபுறத்தே பொதுமக்கள் எனவும் மறுபுறத்தே அரச அலகினர் (அரச உள்ளூராட்சி ஊழியர்கள், அரச கூட்டுத்தாபனப் பணியாளர்கள்) எனவும் இருவகைப் படுத்தலாம். இவ்விருபகுதியினர் மீதும் கருணை காட்டும் வகையில், அரசு பாதிப்புற்றவர்கள் பயன்பெற பல்வேறு திட்டங்களைத் தீட்டியுள்ளது. திட்டங்களைத் தீட்டியவர்களின் எண்ணங்கள் எண்ணியவாறு எட்டவேண்டியவர்களை எட்டிடாததற்கு எண்ணற்ற காரணங்கள் உண்டு. எனினும் பாதிப்புற்றவர்கள் பதறுகிறார்கள். பயனினை அனுபவித்திட அரசஅதிகாரிகளினைத் தேடி அங்கும் இங்கும் அலைகின்றனர் அல்லற்படுகின்றனர்.

இன்றுவரை வெளியான பொது நிர்வாகச் சுற்றறிக்கைகளில் மிகமுக்கியமானவை 25. 9. 86 இல் வெளியான சுற்றறிக்கை 343, 13. 7. 88 இல் வெளியான 21/88 சுற்றறிக்கை என்பனவாகும். இவற்றில் 13. 7. 88 இல் வெளியான சுற்றுநிருபம் 21/88 கடமை நேரத்தில் காயமுறும் அல்லது உயிரினை இழக்கும் அரச ஊழியரின் நலன்களை நாடி நிற்கின்றது. சுற்றுநிருபம் 343 இன் கீழ் காணாமற்போன கடத்தப்பட்ட பொதுமக்கள் உட்பட எவரினதும் வாழ்க்கத்துணையாளர்/ தங்கியிருப்போர் பயனடையலாம்.

பாதிப்புற்றவர்களும் அவர்களது உரித்தாளிகளும் உரியனவற்றை உரியவேளை உரியவாறு அனுபவித்திடாமைக்கு அரச அதிகாரிகளின் அக்கறையின்மையும் அறிவின்மையும், துணிவின்மையுமே என எண்ணினால் அது தவறாகும்.

இவற்றுடன் பாதிப்புள்ளானவர்களின் அல்லது அவர்களது பின்உரித்தாளர்களின் சம்பந்தப்பட்ட விடயம்பற்றிய போதிய அறிவின்மையானதும் அக்கறையின்மையும், எடுத்ததுக்கு எல்லாம் அரச ஊழியர்களைக் குறைகாணும் குணம் எனவும் கொள்ளல்வேண்டும்.

### வாசகர் திருமுகம்

இந்நிலை நீங்குவதற்கு —

(அ) மக்களும் அமுலாக்க அதிகாரிகளும் சுற்றறிக்கைகள் பற்றியஅறிவினைப்பெற அரசும் மக்கள் தொடர்பு சாதனங்களும் வழிவகுக்க வேண்டும்.

(ஆ) சுற்றறிக்கைகளில் பொதிந்துள்ளனவற்றை நுணிந்தறியும் ஆற்றலுடைய அமுலாக்கல் அதிகாரிகளை மட்டுமே இப்பணியில் அமர்த்த வேண்டும். அமர்த்தப்படும் அதிகாரி அறிவு பூர்வமாக ஆராய்ந்து அறிந்து செயற்படும் வேளையிலும் அணுகுபவரை அன்பு பூர்வமாக அணுகுபவராகவும் இருந்திடல் இன்றியமையாததாகும்.

(இ) சுற்றறிக்கைளின் பலனை அடைய பல்வேறுஆவணங்களினை அதிகாரிகள் பாதிப்புற்றவர்களிடமிருந்து கோப்வர். இவற்றுள் பாதிப்புக்குள்ளான அரச ஊழியரின் தனிருபட்ட சேவையிலே [Personal File] இருக்கின்றனவற்றையும் மீண்டும் சமர்ப்பிக்குமாறு சில அதிகாரிகள் அடம்பிடிப்பர். இந்நிலை மாற வேண்டும்; இவ்வாறு கோருவதற்கான காரணங்கள் பல.

(ஈ) அரசின் செயற்றிட்டங்களை மக்கள் தொடர்பு சாதனங்கள் செய்திகளாக அறிவிப்பதோடு மட்டும் அமைந்துவிடாமல் அவற்றின் நன்மை தீமைகள் பற்றிய விளக்கங்களையும் வெளியிடவேண்டும். சுற்றறிக்கைகளை அமுல்படுத்துகின்ற வேளை எழுகின்ற, எழுந்த, எழவிருக்கின்ற சிக்கல்களைக் கண்டறிந்து அவை பற்றி மக்கள் என்னென்ன கருத்துக்களைக் கொண்டிருக்கிறார்கள், எத்தகைய மாற்றங்களை விரும்புகிறார்கள் என்பதுடன் தோற்றிய சிக்கல்களைச் சீராக்கவும் மேலும் அவ்வாறானவை தோன்றாமல் தடுத்திடவும் தகுதியானவற்றை அரசு நிறைவேற்றுமாறு அரசை வற்புறுத்த வேண்டும்.

20 - 3 – 98 இல் உதயன் வாசகர் திருமுகத்தில் வெளியான க. கமலம் எழுதிய விடயமாக—

அவர் எழுதியவாறே அமுலாக்கல் அதிகாரிகளில் சிலர், வடக்கு- கிழக்கு மாகாணத்தில் காணாமற் போனவர்கள் பற்றிய விசாரணையினை மேற்கொள்ள ஜனாதிபதி அவர்களால் நியமிக்கப்பட்ட நீதியரசர் கே. பாலகிட்ணர் அவர்களின் தலைமையிலான விசாரணைக் குழுவினரின் 9- 97 அறிக்கையின் அனுபந்தம் 'C'யின் 3ஆவது பந்தியில் காணாமற் போனவரின் நிலையினை விசாரணைக்குழு அறிவிக்கும் வரை, காணாமற் போனவர்களின் வாழ்க்கைத் துணைவியார் தங்கியிருப்போர் பொது நிர்வாகச் சுற்றறிக்கை 343 –ன் படி (25. 9. 86)பயனடைய உரித்துடையவர் எனத் தெட்டத் தெளிவாக விளக்கிய பின்பும், மரண அத்தாட்சிப் பத்திரத்தினைக்கோருகின்றனர். மனிதாபிமானமும் மனச்சாட்சியுமற்றவர்களை மன்னிக்கவே இயலாது.

வேறு சிலர், அமைச்சு அதிகாரிகள் அனுமதி வழங்கிய பின், வழங்கிய அனுமதியினையும் அங்கீகாரத்தையும் உறுதி செய்ய வேண்டும் என உளறுகின்றனர். மேலும் சிலர் அமைச்சு உறுதிசெய்த பின்பும் பணக்கொடை என்பதால் பொறுப்பிலிருந்து நழுவவும் முனைகின்றனர். அல்லது காலதாமதப்படுத்தி வேதனையில் வெதும்புபவர்களைக் கண் கலங்கிக் கதற வைக்கின்றனர்.

பாதிப்புற்றவர்களின் விடயத்தில் முன்னுரிமை வழங்கி அவர்களுக்குரிய கொடுப்பனவை உடனே வழங்கல் வேண்டும் என சுற்றறிக்கைகள் சுட்டி நிற்கின்றன. எனினும் எம்மவரில் சிலர் ''காலதாமதமாக வழங்கப்படும் நீதி மறுக்கப்பட்ட நீதிக்கு ஒப்பானது'' என்பதனை உணராது பாதிப்புற்றவர்களை பதறவைக்கும் பண்பற்றவர்களாகவும் உள்ளனர். இவர்களை மறந்தும் மன்னிக்கக் கூடாது.

வலுவிழந்தவர்கள், காணாமற்போனவர்கள், கடத்தப்பட்டவர்கள், உயிரிழந்தவர்கள் ஆகியோரின் நலனுக்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படல் வேண்டும்.

க. வி. கந்தவேள்
(கடமை வேளையில் காயமுற்ற அரச அலுவலன்)
வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டுகின்றோம்

யா/ ஆனைக்கோட்டை

**அ. மி. த. க. பாடசாலை**

5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த

**செல்வராசா நிசாந்தன்**

அவர்களையும் இவருக்குக் கற்பித்த அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டுகின்றோம்.

அபிவிருத்திச்சங்கம்,
பழையமாணவர்சங்கம்.

(55143)

# தசாக கிருகயக்ன அழைப்பு

**கணேஸ்வரசர்மா பகீரதன்**

நிகழும் வெகுதானிய வருஷம் சித்திரை மாதம் 2 ஆம் திகதி 15-04-98 புதன்கிழமை மு. ப. 10.45 மணிக்கு கொழும்பில் காலமான எமது ஏக புத்திரன்

பிரம்மஸ்ரீ கணேஸ்வரசர்மா பகீரதன்

அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் சுன்னாகத்தில் உள்ள அவரது இல்லத்தில் பின்வரும் திகதிகளில் நடைபெறும்.

24 - 04 - 98 வெள்ளிக்கிழமை காலை 11 மணி தசாகம்
25 - 04 - 98 சனிக்கிழமை ஏகோதிட்டம் மாசியம்
26 - 04 - 98 ஞாயிற்றுக்கிழமை சபிண்டீகரணம்
27 - 04 - 98 திங்கட்கிழமை கிருகயக்னம்.

ஆத்ம சாந்திக்கிரியைகளில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தி. கணேஸ்வர சர்மா
க. மலர்மங்கை

ஸ்ரேஷன் றோட்,
சுன்னாகம்.

(55145)

# கண்ணீர் அஞ்சலி

ஊரெழு பிள்ளையார் கோயில் பிரதம குருவான

**சிவஸ்ரீ பாலவைத்தியநாதக் குருக்கள்**

அவர்கள் 22 - 04 - 98 அன்று இறைபதம் எய்தியதையிட்டு துயரடைந்திருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மூர்த்தி ஐயா
காரைக்கால் மஞ்சத்தடி.

(50043)

# வாழ்த்துகின்றோம்

இன்று தனது அறுபதாவது அகவை எய்தும் அரியாலை சித்தி விநாயகர் கோயிலடியைச் சேர்ந்த

**கு. சோமாஸ்கந்த குருக்கள்**
**தவலட்சுமி**

தம்பதிகளை பல்லாண்டு காலம் வாழவேண்டுமென மனமாரப் பாராட்டி வாழ்த்தி எல்லாம் வல்ல சித்தி விநாயகப் பெருமானை வேண்டிக் கொள்கின்றோம்.

மு. பிரபாகரசர்மா
உமாராணி
(மகள், மருமகன்)

ஐயனார் கோயில்,
அராலி மேற்கு,
வட்டுக்கோட்டை.

(55148)

யாழ். மாவட்ட

# வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம்

மேற்படி சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் எதிர்வரும் 25 - 04 - 1998 (சனிக்கிழமை) காலை 10 மணிக்கு யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

இதில் 03 - 04 - 1998 அன்று வடக்கு - கிழக்கு மாகாண சபைக் கல்வி அமைச்சின் செயலாளரை எமது சங்கப் பிரதிநிதிகள் சந்தித்துப் பேசியதன் பேரில் யாழ். மாவட்டத்திலுள்ள 600 பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்குவதாக அவர் அளித்த வாக்குறுதி தொடர்பாகவும், பட்டதாரிகளுக்குரிய ஏனைய நியமனங்கள் தொடர்பாகவும் ஆராய வேண்டியுள்ளதால் சகல வேலையற்ற பட்டதாரிகளையும் இக் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி.

ந. விஜயசுந்தரம்
(தலைவர்)

சி. இளங்கோ
சு. சிவானந்தன்
(இணைச் செயலாளர்கள்)

(55132)

# சமய சந்நிதியில்

யாழ். வண்ணை அருள்மிகு ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் கோயிலில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4.45 மணிக்கு வைஷ்ணவ ஏகாதசி விசேட அபிஷேகம், பூசை ஆராதனை வழிபாடுகளுடன் இடம்பெறும். (ஐ-30)

★ ★ ★

நல்லூர் அருள்மிகு ஸ்ரீசிவன் கோயிலில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு பிரதோஷ விரதம் விசேட அபிஷேகம், பூசை ஆராதனை வழிபாடுகளுடன் நடைபெறும். (ஐ-30)

## புனரமைப்பு

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து அருள்மிகு ஸ்ரீமனோன்மணி அம்பாள் ஆலய இராஜ கோபுர புனரமைப்பு வேலைகள் அடியார்களின் உதவியுடன் நடைபெற்று வருவதாக ஆலய பரிபாலன சபையின் தலைவர் க. இராமநாதன் தெரிவித்துள்ளார். (ஐ-30)

## ஒத்திவைப்பு

மே மாதம் 2 ஆம், 3 ஆம், 9 ஆம் திகதிகளில் நடைபெற இருந்த இலங்கை கணக்காளர் சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான பரீட்சை மறு அறிவித்தல் வரை பின்போடப்பட்டுள்ளதுஎன அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## விமர்சன நூல் வெளியீடு

சுன்னாகம், ஏப். 23

கவிஞர் துரையரின் தெருவிளக்கு கவிதை நூலுக்கான விமர்சன நூலான ''பார்வை''யின் வெளியீட்டு விழா இன்று பிற்பகல் 3.30 மணிக்கு சுன்னாகம் பொது நூலக மண்டபத்தில் சி. சிவசரவணபவன் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் திருமதி கோகிலா மகேந்திரன் வெளியீட்டுரையும், ஆறு திருமுருகன் கருத்துரையும் வழங்குவர்.

இயல்வாணன், செல்வி சா. ஜெகதீஸ்வரி ஆகியோரின் விமர்சனங்கள் இந்த நூலில் இடம்பெற்றுள்ளன. (ஐ-27)

## மந்திகையில் இரவு 11வரை மட்டுமே மின்

நெல்லியடி, ஏப். 23

மந்திகை மருத்துவ மனையில் தினமும் இரவு 11மணி வரையுமே மின் விநியோகம் வழங்கப்படுகிறது. அதன் பின்னர் நோயாளிகளும், ஊழியர்களும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர். (ஐ-109-173)

## விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஏப்.23

யாழ். போதனா வைத்திய சாலையில் தற்போது நிகழும் பரிசாரகர் பற்றாக் குறையை நிவர்த்தி செய்யுமுகமாக சிற்றூழியர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. (இ-139-15)

## மகப்பேற்று நிபுணர்

யாழ்ப்பாணம், ஏப். 23

யாழ். போதனா வைத்திய சாலைக்கு மேலும் ஒரு மகப்பேற்று வைத்திய நிபுணர் தென்னிலங்கையில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

என். பெர்னாண்டோவே இந்த மகப்பேற்று வைத்திய நிபுணர் ஆவார்.

யாழ். போதனா வைத்திய சாலையில் தற்போது ஐந்து மகப்பேற்று வைத்திய நிபுணர்கள் [illegible] னர். இவர்களில் மூவர் ஒப்பந்த அடிப்படையில் பணி புரிகின்றனர். (இ-139-15)

யாழ். கொக்குவில்

ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை

# பாடசாலை அபிவிருத்திச் சங்க கூட்டம் 1998

காலம்: **26 - 4 - 98** ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9. 30 மணி (இலங்கை நேரம்)

இடம்: ஷ்டி பாடசாலை மண்டபம்

தலைவர்: திருமதி க. சுப்பிரமணியம் [அதிபர்]

புதுவருட நிர்வாக சபைத் தெரிவு நடைபெற இருப்பதால் பெற்றோர், பழைய மாணவர், நலன் விரும்பிகள் அனைவரையும் தவறாது சமூகம் தருமாறு வேண்டுகின்றோம்.

ச. பரமானந்தன்,
செயலாளர்,

(/3525)

# வாழ்த்துகின்றோம்

பிரபல சட்டத்தரணியும், சத்திய ஆணையாளரும், எமது சட்ட ஆலோசகருமான

**திருமதி விஜியராணி உருத்திரேஸ்வரன்**

(J. P. U. M.)

அவர்கள் நீதி அமைச்சினால் சமாதான நீதிபதியாகவும் உத்தியோகப்பற்றற்ற நீதிவானாகவும் (ஜே. பி. யு. எம்.) நியமிக்கப்பட்டு அண்மையில் பருத்தித்துறை மாவட்ட நீதிவான் திரு. வி. ரி. விக்னராஜா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொள்ளப்பட்டமைக்காக எமது நல்வாழ்த்துக்கள்.

க. சுந்தரேசன் - உதவி ஆணையாளர்
உத்தியோகத்தர்கள்.
கமநல சேவைகள் திணைக்களம்,
யாழ். மாவட்டம்.

(55141)

# கண்ணீர் அஞ்சலி

எமது சகமாணவி பா. நித்தியாவின் அன்புச் சகோதரன்

**பா. கிருபாகரன்**

அவர்களின் மறைவையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும், கண்ணீர் அஞ்சலிகளையும் காணிக்கையாக்குகின்றோம்.

2ஆம் வருடம் A பிரிவு மாணவர்கள்,
விஞ்ஞானபீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

(55149)

# கண்ணீர் மலர்களால் சமர்ப்பணம்

ஊரெழு

**சிவஸ்ரீ பாலசுந்தரக் குருக்கள்**
**வைத்தியநாதக் குருக்கள்**

(வேதாகம வித்தகர், பிரதிஷ்டா திலகம், ஆகம வித்தகர்)

அவர்களின் திடீர் மறைவு சைவ உலகத்திற்கும் அந்தணப் பெருமக்களுக்கும் பேரிழப்பாகும். இவர் குருசிஷ்ய பரம்பரையாக வாழ்ந்து காட்டியவர். இவர் தமது குருத்துவப்பணியை இலங்கையிலும் வெளிநாடுகளிலும் மிகச்சிறப்பாகவும், பக்தியாகவும் கடமையாற்றிய உத்தமர் ஆவார்.

அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் கவலையையும் தெரிவித்துக் கொள்வதுடன் இவருடைய ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

யாழ். இந்துமத குருமார் ஒன்றியம்

74, பிறவுண் வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

(55151)

# மரண அறிவித்தல்

**S. S. நடராசா**

(சங்கீதபூஷணம், இளைப்பாறிய விரிவுரையாளர், பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை)

காரைநகர் அல்லின் வீதியைச் சேர்ந்த S. S. நடராசா 21-04-98 அன்று காலமானார்

இவர் காலஞ்சென்ற திரு. திருமதி சுப்பிரமணியம் அவர்களின் புத்திரனும், சிவபாக்கியம் (செயல் திட்ட அலுவலர், கல்வி அமைச்சு, திருகோணமலை) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற திரு. திருமதி R. கந்தையா அவர்களின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் காரைநகர் அல்லின் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நேற்று (22-04-98) நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி சி. நடராசா

அல்லின் வீதி,
காரைநகர்.

(55153)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நகரத்தடை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நடைமுறை இன்று முதல் உடனடியாக அமுலுக்கு வருவதாக யாழ். நகர கமாண்டர் பிரிகேடியர் சுஸந்த மெண்டிஸ் தெரிவித்தார்.

யாழ். நகர சோதனைச்சாவடிகளில் பொதுமக்கள் அனுபவிக்கும் கஷ்டங்கள் குறித்து அவரிடம் எடுத்துக் கூறியதையடுத்து இந்த நடைமுறை பற்றிய அறிவிப்பை அவர் நேற்று விடுத்தார்.

பொதுமக்களின் வசதிக்காக அமுல் செய்யப்படும் இந்த நடைமுறைக்கு பொதுமக்கள் படையினருக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று அவர் கேட்டுள்ளார்.

(இ-3)


**JOLLY STARS SPORTS CLUB**
**JAFFNA**

Limited Overs Cricket Tournament - 1998

Sponsored by:
E.S. PERAMPALAM & Co.
FOR THE
**JOLLY STARS TROPHY**

Entries are called from the Affiliated Clubs of the Jaffna District Cricket Association

Entry Fees - Rs. 250 per team
Entries Close on 2nd May 1998, 5 p.m.
Draw - 4th May 1998, 4 p.m.
Tentative Dates for the matches: May 8th, 9th, 10th, 11th, 12th, 15th, 16th, 17th - 1998

Tournament Rules and Entry Forms may be obtained from BHARATHI PATHIPPAKAM, 430, K.K.S. ROAD, JAFFNA.

Secretary,
J. S. S. C

22-04-98 (C/3523)



எட்டாவது
**பிறந்த நாள் வாழ்த்து**

காரைநகரைச் சேர்ந்த
திரு. திருமதி தேவராஜா விஜயலக்சுமி
தம்பதிகளின் ஏகபுத்திரன்

**தேவராஜா**
**ஜேம்ஸ் தேவசேயன்**
(தம்பா)

8 ஆவது பிறந்த நாளை இன்று **23-04-98** இல் தனது இணுவில் இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார், பெரியம்மாமார், பெரியப்பாமார், அக்காமார், அத்தான்மார், அண்ணாமார், தம்பிமார், தங்கைமார் பதினாறு பேறும் பெற்றுப் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புமாய் வாழ வாழ்த்துகின்றனர்.

– சித்தப்பாமார்

தென்னிந்திய திருச்சபை,
குருமனை,
காங்கேசன்துறை வீதி,
இணுவில். (சி/3527)



**அமரத்துவ அஞ்சலி!**

தன் அறிவாலும் ஆசாரத்தாலும் அனுட்டானத்தாலும் குலத்திற்கும், ஊருக்கும், உலகளாவிய பெருமை சேர்த்து வாழ்ந்து **22–04–98** இல் ஆடல்வல்லான் அடியிணைக்கீழ் அமரத்துவமுற்ற

சிவாகம வித்தியா பூஷணம்,
வேதாகம மாமணி, சிவபூஜாநிதி, சிவாகமதிலகம்,
சிவபூஜா துரந்தரர், கிரியாரத்தினம்,
சிவாகம கிரியா சூடாமணி

ஊரெழு
**சிவஸ்ரீ ச. பாலவைத்தியநாத**
**சிவாச்சாரியார்**

அவர்கள் திருவடிக்கு அஞ்சலிகள்!

சைவாலய முன்னேற்றக் கழகம்,
கலைவாணி சனசமூக நிலையம்,
ஊரெழு.

(55150)


## 'ராகிங்'...

(முதலாம் பக்கத் தொடர்)

உறுப்பினர் நிஹால் கலபதி பேசுகையில், ''மாணவர்கள் பகிடிவதைக்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்'' என்றார்.

இ. தொ. கா. நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சதாசிவம் பேசுகையில் பல்கலைக் கழகங்களில் இருந்து பகிடிவதையை ஒழிக்காவிட்டால் பாடசாலைகளுக்கும் அது பரவிவிடும்'' என்றார்.

கல்வி, உயர்கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரன சட்டமூலத்தைச் சமர்ப்பித்து உரையாற்றுகையில் ''பல்கலைக்கழகங்களில் பகிடிவதையை ஒழிப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்குமாறு பட்டதாரி மாணவர்களும் அவர்களது பெற்றோரும் தொடர்ச்சியாகக் கோரி வந்துள்ளார்கள் — என்றார்.

இதற்கிடையில் இந்தச் சட்டமூலத்தை எதிர்த்து பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று கண்டன ஆர்ப்பாட்டம் செய்தனர்.

நாடாளுமன்றம் செல்லும் வீதியில் குழுமியிருந்த மாணவர்கள் இந்தச் சட்டமூலத்துக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் அரசு சார்பு நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்காரவும் கலந்துகொண்டார். (இ-3-21)

## சாவகச்சேரி...

(முதலாம் பக்கத் தொடர்)

அதேவேளை —

இந்த சம்பவம் தொடர்பாக நீதி விசாரணை மேற்கொண்டு சம்பந்தப்பட்டவர்கள் கண்டுபிடிக்கப்பட வேண்டும் என்று பொலீஸ் அதிகாரிகளிடம் தாம் கேட்டுள்ளதாக ஈ. பி. டி. பி. யாழ். அமைப்பாளர் கே. வி. ஜெகன் தெரிவித்தார்.

இச்சம்பவத்தைக் கண்டிப்பதாகவும் அவர் கூறினார்.

(இ-3)

## காணாமற்..

(முதலாம் பக்கத் தொடர்)

மா அதிபர் பி. டி. எக்கநாயக்க ஆகியோர் அங்கம் வகித்தனர்.

765 முறைப்பாடுகள் விசாரணைக்கென எடுத்துக் கொள்ளப்பட்டன. விசாரணைக் குழுவினர் அனுராதபுரம், களுத்துறை, வெலிக்கடை ஆகிய சிறைச்சாலைகளுக்கும் சென்றிருந்தார்கள்.

யாழ்ப்பாணத்தில் 30 நாள்கள் இக் குழுவினர் விசாரணைகள் நடத்தினார்கள். பலாலியிலும், யாழ்ப்பாணக் கச்சேரியிலும் இவை இடம் பெற்றன.

முறைப்பாடு செய்தவர்களில் 145 பேர் விசாரணைக்குச் சமுகமளித்திருக்கவில்லை. 25 கடிதங்கள் விநியோகிக்கப்படாமல் திருப்பி அனுப்பிவைக்கப்பட்டன.

சாட்சியங்கள் போதியதாக இல்லாதபடியால் 219 முறைப்பாடுகள் சம்பந்தமாக மேலும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் குழு விதப்புரை செய்துள்ளது.

விசாரணைக் குழுவுக்கு 2 ஆயிரத்து 621 முறைப்பாடுகள் கிடைத்தன. உண்மையில் இந்த முறைப்பாடுகள் யாவும் 765 பேர்கள் பற்றியதாகும்.

அதாவது ஒரு சம்பவம் பற்றி மட்டும் 98 முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டிருந்தன.

பொதுமக்கள், அரச சார்பற்ற நிறுவனத்தினர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரிடம் இருந்தும்—

ஐ. நா. நிறுவனம், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு போன்ற நிறுவனங்களிடம் இருந்தும் — இந்த முறைப்பாடுகள் கிடைத்திருந்தன.

விசாரணைகளின் போது செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு, சர்வதேச மன்னிப்புச் சபை ஆகியவற்றின் உறுப்பினர்களையும் குழுவினர் சந்தித்தனர். (இ-3)

## கொழும்பு...

(முதலாம் பக்கத் தொடர்)

வாறு தெரிவித்தார்.

அவர்மேலும் கூறியதாவது, கொழும்பில் நடக்கும் கைதுகளை தவிர்க்க விசேட நடவடிக்கை விரைவில் எடுக்கப்படும்.

வகைதொகையின்றி தமிழர்களைக் கைது செய்வது அரசியல் விளையாட்டுக்கு அல்ல. பாதுகாப்புக் காரணமாகவே, தவிர்க்க முடியாத நிலையில் தமிழர்கள் கைது செய்யப்பட வேண்டிய நிலை ஏற்படுகிறது.

பாதுகாப்பு பிரதி அமைச்சர் அனுருத்த ரத்வத்தவுடன் இது தொடர்பாக பேசியுள்ளேன். விரைவில் இதற்கு விசேட ஏற்பாடு ஒன்றை அரசு செய்யும் — என்றார்.

இந்த விவாதத்தில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா. சம்பந்தன், ஏ. சி. எஸ். ஹமீட், மகிந்த சமரசிங்க, பி. பி. தேவராஜ், அமைச்சர் அஷ்ரப் ஆகியோர் தமிழர் கைது செய்வதற்கு எதிராக உரையாற்றினர். (இ-3)

## புலிகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்

டியது அவசியம்.

இலங்கை விவகாரம் தொடர்பாக விரிவான கொள்கை ஒன்றை தயாரித்துக் கொண்டிருக்கின்றேன். அதுவெளியானதும் இலங்கை குறித்துஇந்தியாவின் நிலைப்பாடு தெரியப்படுத்தப்படும்.

கடந்த காலங்களில் இந்தியாவில்இந்திரா காந்திமுதல் குஜ்ரால் வரை இருந்த அரசுகள் இலங்கை விவகாரத்தில் மெத்தனமான போக்கையே கடைப்பிடித்தன. ஆனால் தற்போதை அரசு இலங்கை தமிழர் விவகாரத்தில் பக்கச் சார்பற்ற அணுகுமுறைக் கொள்கையையே கடைப்பிடிக்கும்.

இப்படி அவர் கூறினார்.

கேள்வி ஒன்றுக்கு அவர் பதில் அளிக்கையில் வை. கோபாலசாமி, டாக்டர் ராமதாஸ், ஜோர்ஜ் பெர்னாண்டஸ் ஆகியோர் முன்பு விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களாக இருந்திருக்கலாம். ஆனால் ஓர் அரசாங்கத்தின் அங்கமாக அவர்கள் வந்த பின் அரசாங்கத்தின் கட்டுக்கோப்புடனேயே செயற்படுவார்கள் — என்றார். (இ-3-ரீ)

## கப்பலில் மருந்து

யாழ். போதனாவைத்திய சாலையின் இந்த ஆண்டு பாவனைக்குரிய மருந்து வகைகளில், முதலாம் கந்தாயத்துக்குரிய மருந்துகளில் சில நேற்று வந்த செஞ்சிலுவை சர்வதேசக் கப்பலில் எடுத்து வரப்பட்டன.

(இ-139-15)

## மூவர் தெரிவு

யாழ். போதனா வைத்திய சாலையில் நீண்ட நாள்களாக இருந்து வந்த எழுதுநர்களுக்கான வெற்றிடங்களுக்கு மூவர் மாத்திரமே நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதே நேரம் சென்றமாதம் இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்காக நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களில் நால்வர் மாத்திரமே சமுகம் கொடுத்திருந்தனர்.

நால்வரிலும் மூவரே தகுதி பெற்றுள்ளனர்.

ஏனைய 11 பேர் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கவில்லை. (இ-139-15)

## மாகாணசபை ஊழியர் பிரச்சினை பற்றி ஆராய்வு

யாழ்ப்பாணம், ஏப். 23

யாழ்ப்பாணம் வந்துள்ள வடக்கு – கிழக்கு மாகாண பொது நிர்வாக அமைச்சின் பிரதிப் பிரதம செயலாளர் கே. பரமலிங்கம் இன்று காலை யாழ். மாவட்டத்தில் பணியாற்றும் மாகாண சபை ஊழியர்களின் பிரச்சினைகள் குறித்து ஆராயவிருக்கிறார்.

மாகாணசபை இணைப்பாளர் அலுவலகத்தில் இந்த சந்திப்பு இடம்பெறும்.

(இ-5)

## திருமலை...

(முதலாம் பக்கத் தொடர்))

தாக்குதல்களும் இடம்பெற்றன.

அக்கிராமத்தில் கிராமவாசிகள் ஏற்கனவே வெளியேறியிருந்தனர். விடுதலைப் புலிகள் நடமாட்டம் இருப்பதை அவதானித்து இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-21)

## பொலீஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு இடம்பெற்ற துப்பாக்கிச் சண்டையில் சிக்கி அரிசி ஆலை தொழிலாளி ஒருவர் உயிரிழந்ததாகவும் — தெரிவிக்கப்பட்டது.

இழப்புக்கள் எதுவும் இன்றி மேற்கொண்ட இத்தாக்குதலில் ரி56 – 1 ரகத் துப்பாக்கி — 4, ஏ. கே. ரவைக்கூடு—8, நடுத்தர ரவைகள் — 318, தொலைத் தொடர்பு சாதனம்—1 உட்பட பல ஆயுத தளபாடங்களை கைப்பற்றியதாக ''புலிகளின் குரல்'' தெரிவித்தது. (இ-3-21-164)


**மொனரா எயர் சேவிஸ்**
**விசேட கருமபீடங்கள்**

வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் உள்ள மக்களின் நன்மை கருதி நெல்லியடி, சாவகச்சேரி ஆகிய இடங்களில் எமது விமான சேவையின் டிக்கட் பதியும் கருமபீடங்களை நாளை ஆரம்பிக்கின்றோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அப்பகுதி மக்கள் தமது டிக்கட்டுக்களை அந்தக் கருமபீடங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

வடமராட்சியில்...
**பிள்ளையார் ஸ்ரோர்ஸ்**
பிரதான வீதி, நெல்லியடி.

தென்மராட்சியில்...
**மகாலட்சுமி ஸ்ரோர்ஸ்**
176, கண்டி வீதி, சாவகச்சேரி.

டிக்கட் பதிவு முகவர்கள்:
**மகாலட்சுமி ஸ்ரோர்ஸ்**
212, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(சி/3528)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்)லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 அம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில், 23-04-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org